VANAVARAYAR
Institute of Agriculture
Enriching India

உழவர்
சிந்தனைக் களஞ்சியம்
மலர் 9 | இதழ் 3 | செப்டம்பர் 2025



# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்

- கோழிக்கொண்டை மலர் சாகுபடி தொழில்நுட்பம்
- காய்கறிகளில் மைக்ரோகிரீன்ஸ்: ஊட்டச்சத்து நிறைந்த நவீன உணவு
- வேளாண் சுற்றுலா  தமிழ்நாட்டின் பசுமைச் செல்வத்தின் புதிய முகம்

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி - 642 103




VANAVARAYAR Institute of Agriculture

VIA

# VANAVARAYAR
## Institute of Agriculture
Enriching India

(கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது மற்றும் புது தில்லி, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் அங்கீகாரம் பெற்றது)

## இளங்கலை வேளாண்மை (நான்கு வருடம்)

கல்வி தகுதி +2 [ குரூப் 1, குரூப் 2, குரூப் 2A ]

தரமான கல்வி, ஆராய்ச்சி & வேளாண் விரிவாக்கம் ஆகியவற்றின் மூலம் வேளாண் உற்பத்தி மற்றும் நிலைத்தன்மையை மேன்படுத்துவதும், வேளாண் அமைப்புகளின் துணை கொண்டு கிராமப்புற வளங்களை பாதுகாத்து அதனை மேன்படுத்துவதும் இக் கல்லூரியின் நோக்கமாகும்.

மாணவர்களின் கற்றல் மற்றும் செயல் திறனை மேன்படுத்த

- 250 ஏக்கர் விளை நிலம்
- 16 மேன்படுத்தப்பட்ட வகுப்பறைகள்
- 18 ஆய்வகங்கள்+1 'B Class'வானிலை ஆய்வு மையம்
- 14 பயிற்றுவிக்கும் மையம்
- 14 உற்பத்தி மையம்

சிறப்பு அம்சங்கள்

- 650 பேர் இடவசதி கொண்ட இரண்டு மகளிர் விடுதி
- 450 பேர் இடவசதி கொண்ட மாணவர் விடுதி
- 470 பேர் அமரக்கூடிய உணவகம்
- 24 X 7 கண்காணிப்பு
- 6 ஏக்கர் விளையாட்டு திடல்

SAKTHI GROUP

NM 100
1923 - 2014
CENTENARY CELEBRATIONS

NIA
EDUCATIONAL INSTITUTIONS | Enlightening Minds

Visit at : https://www.via.ac.in

மேலும் விபரங்களுக்கு : +91 7402618001 - +91 9942908410

# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்


✻ மலர் 9 ✻ செப்டம்பர் 2025 ( ஆவணி – புரட்டாசி ) ✻ இதழ் 3



**வெளியீடு** : **வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்**
மணக்கடவு, பொள்ளாச்சி - 642 103

**நிறுவனர்** : அருட்செல்வர் டாக்டர் **நா. மகாலிங்கம்**

**தலைவர்** : முனைவர் **ம. மாணிக்கம்**
தலைவர், என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்கள், பொள்ளாச்சி

**தாளாளர்** : திருமதி. **கி. கற்பகவள்ளி**
தாளாளர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**ஊக்கம்** : **பேராசிரியர். நா. கெம்பு செட்டி,** பி எச்.டி.
இயக்குனர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**பேராசிரியர். கு. பிரபாகர்,** பி எச்.டி.
முதல்வர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**ஒருங்கிணைப்பாளர்**: **முனைவர் கா. காளிதாஸ்**
இணை பேராசிரியர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**முனைவர் பொ. மகுடீஸ்வரி**
உதவி பேராசிரியர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**தொகுப்பு** : **முனைவர் த. துர்காதேவி**
**செல்வி கு. கிருத்திகா**
**முனைவர் எம். ரம்யா**
**முனைவர் செ.கா. சங்கரி**
**முனைவர் கோ. தாமோதரன்**
உதவிப் பேராசிரியர்கள்,
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**வடிவமைப்பு** : **திரு. எஸ். சிற்பி பால சுப்ரமணியம்**
ஒருங்கிணைப்பாளர், வேளாண் அபிவிருத்தி மையம்
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**திரு. கா. முருகானந்தம்,**
ஒருங்கிணைப்பாளர், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்

**விநியோகம்** : **திரு. ஆ. குமாரச் செல்வன்,** நூலகர்
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

# பொருளடக்கம்


| வ. எண் | கட்டுரைகள் | ப.எண் |
|---|---|---|
| 1 | பொள்ளாச்சியிலிருந்து பிரான்ஸ் வரை ஜாதிக்காயின் உலகப்பயணம்! | 04 |
| 2 | வானிலை முன்னறிவிப்பு மற்றும் மேற்குத் தமிழகத்தில் பயிர் திட்டமிடல் - ஒரு அறிவியல் பார்வை | 06 |
| 3 | கோழிக்கொண்டை மலர் சாகுபடி தொழில்நுட்பம் | 09 |
| 4 | காய்கறிகளில் மைக்ரோகிரீன்ஸ்: ஊட்டச்சத்து நிறைந்த நவீன உணவு | 12 |
| 5 | சிவப்புத் தண்டு கீரை: நகர வேளாண்மையின் சத்தான இலைக் காய்கறி | 14 |
| 6 | புல் வெட்டும் இயந்திரம் (Brush Cutter) - விவசாயியின் நம்பிக்கை கருவி | 17 |
| 7 | அமெரிக்கா விதிக்கும் புதிய வரி இந்திய விவசாய ஏற்றுமதிக்கு ₹48,000 கோடி பாதிப்பு? | 19 |
| 8 | வேளாண் சுற்றுலா - தமிழ்நாட்டின் பசுமைச் செல்வத்தின் புதிய முகம் | 21 |
| 9 | உணவு குறிப்பு - குழி பணியாரம் | 23 |
| 10 | கல்லூரி வளாக நிகழ்ச்சிகள் தொகுப்பு | 24-48 |



உழவர் சிந்தனைக் களஞ்சியம் இதழில் வரும் கருத்துக்களுக்கு
அதன் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்



தொடர்புக்கு :
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
(கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நிரந்தர இணைவு பெற்றது மற்றும் புதுதில்லி, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் அங்கீகாரம் பெற்றது)
மணக்கடவு, ஆனைமலை(வட்டம்), பொள்ளாச்சி, கோவை மாவட்டம் - 642 103
தொலைப்பேசி +91 74026 18001, மின்அஞ்சல் : usk@via.ac.in.

அச்சிட்டோர்
**ருக்குமணி ஆப்செட் பிரஸ்**
E-32 சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், கோவை - 641 021.
போன் : 99655 37132 மெயில் : design.rukmaniop@gmail.com

# முதல்வர் உரை

**"உழவர் சிந்தனை களஞ்சிய"** வாசகர்களுக்கு வணக்கம்.

இன்றைய விவசாயம் ஒரு தொழில் மட்டும் அல்ல, அது ஒரு சவாலும், ஒரு வாய்ப்பும் கூட. பாரம்பரிய முறைகளுக்கும், நவீன தொழில்நுட்பத்துக்கும் இடையே பாலமாக நின்று, விவசாயிகள் இன்று புதிய பாதையில் பயணிக்கிறார்கள். அந்தப் பயணத்தை பதிவு செய்து, சிந்தனையை பகிர்ந்து, முன்னேற்றத்துக்கு வழிகாட்டுவதே இந்தக் களஞ்சியத்தின் நோக்கம்.

இந்த வெளியீட்டில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள், வேளாண் சுற்றுலா முதல் உலக வர்த்தக சவால்கள் வரை, மைக்ரோகிரீன்ஸ் போன்ற புதிய உணவுப் போக்குகள் முதல் வானிலை முன்னறிவிப்பு வரை, விவசாயத்தை பல்வேறு கோணங்களில் சித்தரிக்கின்றன. இதன் மூலம் விவசாயிகள் மட்டுமல்லாது, மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுவாசகர்களும் பயன்பெறுவார்கள்.

''உழவர் சிந்தனை களஞ்சியம்'' என்பது வெறும் நூல் அல்ல அது விவசாயிகளின் அனுபவமும், விஞ்ஞானிகளின் அறிவும், எழுத்தாளர்களின் குரலும் ஒன்றாகச் சேரும் ஒரு மேடை. தமிழ்நாட்டின் பசுமை நிலங்களிலிருந்து உலக சந்தைகள்வரை, விவசாயத்தின் கதையை வாசகர்கள் இங்கு உணரலாம்.

இந்தப் பயணத்தில் பங்களித்த எழுத்தாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விவசாயிகள் அனைவருக்கும் எங்கள் நன்றி. வாசகர்களே, நீங்கள் வாசிக்கும் ஒவ்வொரு பக்கமும், உழவரின் உழைப்பையும், விவசாயத்தின் எதிர்காலத்தையும் சிந்திக்க வைக்கும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது.

**விவசாயம் பேசப்பட வேண்டும், விவசாயி கேட்கப்பட வேண்டும்,**
**அதுவே இந்தக் களஞ்சியத்தின் பணி.**

வாழ்த்துகளுடன்
**முதல்வர்**

⁕வேளாண் விஞ்ஞானியின் வெற்றிக்கதை⁕



# பொள்ளாச்சியிலிருந்து பிரான்ஸ் வரை ஜாதிக்காயின் உலகப்பயணம்!

## 120 பேர் இணைந்து உருவாக்கிய மாற்றம் ரூ.3 கோடி வரை வருமானம்!

பொதுமக்கள் நம் விவசாயிகள் பற்றி பேசும் போது பெரும்பாலும் எழும் கேள்வி இது: “அவர்கள் உழைப்புக்கு பதிலளிக்கும் வருமானம் எவ்வளவு?” ஆனால் இங்கே, பொள்ளாச்சியைச் சேர்ந்த 120 பேர் தங்களது உழைப்புக்கு தாங்களே மதிப்பிட்ட விலையைக் கூட்டி, உலக சந்தைகளில் கைபேசியிருப்பது உண்மையாகவே ஒரு சாதனை தான்.

மேற்கு தொடர்ச்சி மலைகளின் மடியில் அமைந்துள்ள பொள்ளாச்சி பகுதியில், நாட்டு வாசனை மிகுந்த ஜாதிக்காய் (nutmeg) விவசாயம் பல தலைமுறையாக நடைபெற்று வருகிறது. ஆனால் அந்த பயிரின் உண்மையான மதிப்பை உணராமல், இடையில் பலர் கையாண்டு விட்டுச் சென்ற வரலாறும் இருக்கிறது. இதைத் தடுக்கவே ஒரு புதிய மாறுபாடாக இடைத்தரகர்களை விலக்கி, நேரடி விற்பனை வாயிலாக உலக சந்தையை நோக்கிய பயணம்!

### மாற்றத்தின் விதை: ஒரு விவசாயி நின்ற இடம்

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நானோ தொழில்நுட்பத்தில் உயர் கல்வி



முடித்து, பெங்களூரில் பணியாற்றியிருந்த ஆர். ரஞ்சித் குமார், தந்தையின் உடல்நலக்குறைவால் 2017 இல் கிராமத்துக்குத் திரும்பியபோது, உள்ளூர் விவசாய நிலவரம் அவருக்கு அதிர்ச்சியை அளித்தது. “தந்தையின் நிலை மோசமாக இருந்தது. பெற்றோருடன் இருக்க வேண்டும் என்பதற்காகவே கிராமத்திற்கு திரும்பினேன். ஆனால் விவசாயிகளின் நிலையைப் பார்த்ததும், என்னால் சும்மா இருக்க முடியவில்லை,” என்கிறார் அவர். விவசாயிகளின் பயிர்கள் நேரடியாக சந்தைக்கு செல்லாமல், பலரின் கையூறாக நகரும் முறை, சந்தை விலையை விவசாயிகள் அறியாதிருப்பதும், அவர்களது உழைப்புக்குப் போதிய பலன் இல்லாததுமாக இருந்தது.

### “இது நம்மால் சாத்தியமா?” - ஒரே கேள்வி, 120 பதில்கள்

11 ஏக்கர் நிலத்தில் ஜாதிக்காய் வளர்த்து வரும் விஷ்வநாத் கூறுகிறார்:



**வினா** “தணல் புரட்சி” தமிழ்நாட்டில் முக்கியமாக எதைக் குறிக்கிறது?

பதில்: மிளகாய் மற்றும் உணவுப் பழங்கள்

**வினா:** தமிழகத்தில் பெருமளவில் மிளகாய் உற்பத்தியாகும் மாவட்டம் எது?

பதில்: இராணிப்பேட்டை

“இடைத்தரகர்கள் வீட்டுக்கு வந்து, தாங்கள் சொல்வதையே விலை எனக் கூறிச் சென்றுவிடுவார்கள். நாங்கள் எதையும் பேசிக் கொள்ள முடியாது. எங்கே பயிர் எவ்வளவு விலைக்கு விற்கிறது என்றே தெரியாது.” இதற்கான தீர்வாக, 120 விவசாயிகள் ஒன்றிணைந்து பொள்ளாச்சி ஜாதிக்காய் உற்பத்தியாளர் நிறுவனம் (FPC)என்ற கூட்டமைப்பை உருவாக்கினார்கள். இதன் மூலம் ஜாதிக்காய் பயிர்கள் நேரடியாக சுத்திகரித்து, தொகுத்து, ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தொடங்கினர்.

**முதலாவது பாக்கெட் முதலாவது புன்னகை!**

“இங்கே நம்ம உற்பத்தி முதல்முறையாக ஏற்றுமதி ஆச்சு. இது எங்களுக்கு ஒரு புதிய தொடக்கம்,” என 48 வயதான விஷ்வநாத் மகிழ்ச்சியுடன் பகிர்கிறார். இன்றைக்கு அவர்கள் ஆண்டு வருமானம் ரூ.3 கோடி வரை சென்றிருக்கிறது. “ இதற்கு முன்னால் ஒரு கிலோவிற்கு ரூ.300 தான் கிடைக்கும். இப்போ ரூ.470க்கு விற்கிறோம். கடந்த வருடம் மட்டும் 550 கிலோ விற்க ரூ.50,000 லாபம் வந்தது,” என்கிறார் அவர்.

**வெறும் வியாபாரமல்ல - விழிப்புணர்வும்!**

ரஞ்சித் குமார் உருவாக்கிய இந்த உற்பத்தியாளர் நிறுவனம், வெறும் விற்பனை மட்டும் நோக்கமல்ல. விவசாயிகள் ஒன்றிணைவதன் முக்கியத்துவம், சந்தை விலை பற்றிய புரிதல், ஜாதிக்காய் தரமான வகைகளைப் பராமரிக்கும் தொழில்நுட்பம் ஆகியவற்றிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

**விதைக்கும் கையால் உலகை மாற்றலாம்**

இது ஒரு கதை அல்ல இது ஒரு எழுச்சி. பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்கு முன் வழிகாட்டி. பொள்ளாச்சி விவசாயிகள் எடுத்த இந்த பயணம், இன்னும் பல கிராமங்களுக்கும் நம்பிக்கையை விதைக்கட்டும்!

உழவர் சிந்தனைக் களஞ்சியக் குழு
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி.

# வானிலை முன்னறிவிப்பு மற்றும் மேற்குத் தமிழகத்தில் பயிர் திட்டமிடல் –

## ஒரு அறிவியல் பார்வை

**அறிமுகம்:**

நம் அன்றாட வாழ்க்கையில் வானிலை ஒரு முக்கியமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. இன்று மழை பெய்யுமா? நாளை வெயில் கொளுத்துமா? காற்றழுத்தம் எப்படி இருக்கும்? இவை போன்ற கேள்விகளுக்குத் துல்லியமான பதிலை அளிக்கிறது வானிலை முன்னறிவிப்பு. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம், இன்று நாம் பல்வேறு முறைகளில் வானிலையைக் கணிக்க முடிகிறது.

**வானிலை முன்னறிவிப்பு என்றால் என்ன?**

வானிலை முன்னறிவிப்பு என்பது புவியின் வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்ந்து, எதிர்கால வானிலை நிலைமைகளைக் கணிப்பது ஆகும். இதற்காக செயற்கைக்கோள்கள், ராடார்கள், வானிலை மையங்கள் போன்ற பல தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**வானிலை முன்னறிவிப்பின் முக்கியத்துவம்**

- விவசாயம், மீன்பிடித்தல் போன்ற தொழில்களில் காலநிலையின் முன்னறிவிப்பு மிகவும் அவசியம்.
- விமானப் பயணங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துக்கும் பாதுகாப்பு அளிக்கிறது
- புயல், கனமழை, வெள்ளம் போன்ற இயற்கை பேரழிவுகளுக்கும் முன் எச்சரிக்கை அளிக்கிறது.
- பொதுமக்கள் தங்கள் திட்டங்களை ஏற்படுத்தும் வழிகாட்டியாக உள்ளது.

**வானிலை முன்னறிவிப்பின் வகைகள்**

**1. குறுகிய கால வானிலை முன்னறிவிப்பு (Short-Range Forecast):**

இது 1 முதல் 3 நாட்களுக்கு இடையில் இருக்கும் வானிலை நிலைமைகளை கணிக்கிறது. இது மிகவும் துல்லியமான முறையாக இருக்கிறது.

**2. நடுத்தர கால வானிலை முன்னறிவிப்பு (Medium-Range Forecast):**

இது 4 முதல் 7 நாட்களுக்கு இடையே அளிக்கப்படும் முன்னறிவிப்பு. இது பயண திட்டங்கள் மற்றும் விவசாயத் திட்டங்களுக்குப் பயனுள்ளதாக உள்ளது.

**3. நீண்ட கால வானிலை முன்னறிவிப்பு (Long-Range Forecast):**

இது ஒரு மாதம் அல்லது மேலும் நீடிக்கும் காலத்திற்கு வழங்கப்படும். இது பருவமழை கணிப்புகள் போன்றவற்றிற்கு உதவுகிறது.

**4. திடீர் கால வானிலை முன்னறிவிப்பு (Long-Range Forecast):**

இது வெறும் சில மணிநேரத்திற்கு மட்டும் தரப்படும் எச்சரிக்கையாகும். புயல்,

இடி மின்னலுடன் கூடிய மழை போன்ற திடீர் மாற்றங்களுக்கு இது மிக முக்கியமானது.

தமிழ்நாட்டின் மேற்குப் பகுதிகள் (கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல் போன்ற மாவட்டங்கள்) பெரும்பாலும் வறண்ட பருவநிலையைக் கொண்டுள்ளன. இங்கு பருவமழை தாமதமாகவோ குறைவாகவோ அல்லது ஒருசில சமயங்களில் மிக அதிகமாகவோ பெய்யும். இத்தகைய அசாதாரணமான மழை நிலைகளுக்கு (aberrant rainfall situations) ஏற்ப அவசர பயிர் திட்டமிடல் (Contingency Crop Planning) மிக அவசியமாகும்.

**அசாதாரணமான மழை என்றால் என்ன?**

அசாதாரணமான மழை என்பது:

- பருவமழை தாமதமாக தொடங்குவது
- குறைவான மழை
- திடீரென கடுமையான மழை
- பருவமழையின் நடுவில் இடைவெளி
- பருவக்காலத்தைக் கடந்தும் மழை நீடித்தல்

இவையெல்லாம் பயிர் வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தி, விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத்தும்.

**அவசர பயிர் திட்டமிடலின் நோக்கம்**

- காலநிலைக்கு ஏற்ற பயிர்களை தேர்ந்தெடுத்தல்
- மழை இல்லாத நேரங்களில் சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் நீர்த்தேக்க தொட்டிகள் போன்ற நடைமுறைகளை உருவாக்குதல்
- வறட்சி மற்றும் மழையில் இருந்து பயிர்களைப் பாதுகாப்பது
- உற்பத்தி இழப்புகளைக் குறைக்கும் நடவடிக்கைகள்.

| மழை நிலை | பரிந்துரைக்கப்படும் பயிர்கள் | கூடுதல் நடவடிக்கைகள் |
|---|---|---|
| பருவமழை தாமதம் (15 - 30 நாள்) | பாசிப்பயறு, கொள்ளு, சுண்டல், சோளம் | தண்ணீர் சேமிப்பு முறைகள், நேர்த்தியான விதைப்பு |
| பருவமழை மிகவும் தாமதம் (>30 நாள்) | எள்ளு, சாமை, கேழ்வரகு | குறுகிய கால பயிர்கள் தேர்வு செய்தல் |
| குறைந்த மழை | வேர்க்கடலை, கம்பு, சோளம் | மண்ணின் ஈரப்பதம் பாதுகாப்பு நடைமுறைகள் |
| கனமழையால் விளைந்த சேதம் | மறு விதைப்பு (Re-sowing) அல்லது இடைநடவு | மிதமான நீர் வடிகால் அமைப்புகள் |
| பருவமழை தாமதித்து நீடித்தல் | மாற்றுப்பயிர்கள்-துவரம் பருப்பு, சோயா | பயிர் இருப்பின் அறுவடை செய்து கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்துவது |

**நூதன உத்திகள்**

- பயிர் காப்பீடு திட்டங்கள் பயிர் சேதத்தை சமாளிக்க நிதியளவு பாதுகாப்பு
- தொகுதி நிலை ஆலோசனைகள் வள மைய வழிகாட்டல் அல்லது ஒவ்வொரு வட்டத்திற்கும் தனி ஆலோசனைகள்
- தொலைதூர சென்சார்கள், வானிலை நிலவரம் பயிர் திட்டமிடலில் உதவுகிறது
- நீர்ப்பாசன செயல்திறன் உயர்த்தும் / முறைகள் பயன்படுத்த வேண்டும்

**முடிவுரை**

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி, செயற்கைக்கோள்கள் மற்றும் கணினி மாதிரிகள் மூலம் வானிலை முன்னறிவிப்பு மிகவும் துல்லியமாகவும், பயனுள்ளதாகவும் மாறியுள்ளது. இந்த அறிவியல் நாம் இயற்கையை புரிந்து கொள்வதற்கும், பாதுகாப்பாக வாழ்வதற்கும் வழிகாட்டி ஆகிறது. அது மட்டுமின்றி மேற்குத் தமிழகத்தில் மழை மாறுபாடுகள் என்பது பொதுவான ஒன்று. இது விவசாயத்தில் எதிர்பாராத இழப்புகளை ஏற்படுத்தும். எனவே, அவசர பயிர் திட்டமிடல் என்பது தற்போதைய காலநிலை மாற்ற சூழ்நிலைக்கு மிகவும் தேவையானது. இது விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாகும்.

முனைவர் மு. ர. நந்தகுமார் மற்றும்
முனைவர் ப. நிவேதாதேவி, உழவியல் துறை
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி



## பேராசை உழவர்

ஒரு காலத்தில் ஒரு சிறிய கிராமத்தில், ஒரு ஒருவன் உழவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் உழைப்பாளி. தன் நிலத்தில் தினமும் கடுமையாக உழைத்து நல்ல விளைச்சல் பெறுவான். ஒரு நாள், அவன் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது, ஒரு தெய்வம் தோன்றி, உன் உழைப்புக்கு நான் மகிழ்ந்திருக்கிறேன். தினமும் உன் நிலத்தில் உழுதால், அந்த நாளில் உழுதிய நிலம் முழுவதும் தங்கமாக மாறும் என்றது.

அடுத்த நாள் காலையில் உழவன் மகிழ்ச்சியுடன் நிலத்தில் உழ ஆரம்பித்தான். உண்மையில், உழுத இடம் முழுவதும் தங்கமாக மாறியது. ஆனால், அவன் மனதில் பேராசை பிறந்தது. இன்று நான் சிறிது நிலம் மட்டும் உழுதேன். நாளை இன்னும் அதிகமாக உழுவேன், இன்னும் அதிக தங்கம் கிடைக்கும் என்று நினைத்தான். அவ்வாறு தினமும் பேராசை காரணமாக அதிகமாக உழுத்தான். ஆனால், அவன் உடல் சக்தி குறைந்து விட்டது. ஒருநாள் அவன் நிலத்தின் பாதியிலேயே விழுந்து உயிர் நீத்தான்.

தங்கம் கிடைத்தாலும், அதை அனுபவிக்க யாரும் இல்லை. அவன் பேராசை காரணமாக உயிரையே இழந்தான். கதை சொல்லும் நெறி: **பேராசை எப்போதும் நாசம் தரும். திருப்தியான வாழ்க்கையை மகிழ்ச்சியாக்கும்.**



# கோழிக்கொண்டை மலர் சாகுபடி தொழில்நுட்பம்

கோழிக்கொண்டை (Cock's comb- Celosia cristata) பூக்கள் பொதுவாக சேவல்கொண்டை பூ அல்லது பட்டுப்பூ என்று அழைக்கப்படும். இது அழகிய, வண்ணமயமான மலர்களுக்காக பயிரிடப்படும் ஒரு முக்கியமான ஓராண்டு அலங்கார மலர் பயிர் ஆகும். அமரந்தேசியே (Amaranthaceae) குடும்பத்தைச் சேர்ந்தது. மழைக்கால ஓராண்டு மலர் பயிராக சாகுபடி செய்வதற்கு ஏற்ற மலராகும். சிவப்பு, மஞ்சள், இளஞ்சிவப்பு, ஆரஞ்சு, ஊதா போன்ற பல வண்ணங்களில் உள்ளது. இந்தியாவில் திறந்த வெளி நிலங்களில் மட்டுமின்றி பாதுகாப்பாக வளரும் இடங்களிலும் பயிரிடப்படுகிறது. அதிக வெப்பத்தைத் தாங்கும் திறன் உடையது.

### பயன்பாடு மற்றும் முக்கியத்துவம்

- மாலை தயாரிப்பு, அலங்காரம், பூங்கா அமைப்பு, நில எழிலூட்டுதல் ஆகியவற்றில் பரவலாக பயன்படுத்தப்படுகிறது.
- நீண்ட சேமிப்பு காலம் கொண்டதால் கொய் மலர்களாகவும் பயன்படுத்தப்படும்.
- உலர்மலர் அலங்காரங்களில் முக்கிய பங்கு வகிக்கும் மலராகும்.
- சில இடங்களில் இலை மற்றும் விதைகள் காய்கறியாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

### காலநிலை மற்றும் மண்

- **காலநிலை:** சூடான மற்றும் வெயிலான வானிலை விரும்பும் பயிர். சிறந்த வெப்பநிலை: 25 - 30$^0$C நீண்டகால மேகமூட்டம் மலர் தரத்தையும், விளைச்சலையும் குறைக்கும்.
- **மண்:** சீராக வடிகால் வசதி கொண்ட, சாணம் கலந்த நல்ல கரிமச் சத்து நிறைந்த மண் உகந்தது. காரஅமில தன்மை: 6.0 - 7.0 அதிக களிமண் அல்லது நீர் தேங்கி நிற்கும் மண், பயிர் வளர்ச்சியை பாதிக்கும்.

### வகைகள்

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பயிரிடப்படும் பிரபலமான வகைகள்:

- **செலோசியா கிரிஸ்டேட்டா (Cockscomb):** டால் ரெட், டால் யெல்லோ, டால் ஆரஞ்சு.

- **செலோசியா ப்லுமோசா(Plumed):** கேஸ்டில் தொடர் ஃப்ரெஷ் லுக் தொடர்.
- **செலோசியா ஆர்ஜென்டியா (Cut flower):** பாம்பே, சீஃப், செஞ்சுரி, கிமோனோ தொடர்.

**தாவரப் பெருக்கம் மற்றும் நாற்றங்கால் தயாரித்தல்**

- விதைகள் மூலம் பயிரிடப்படும்
- விதை அளவு: 1 -1.5 கிலோ/ஹெக்டேர்.
- விதைகள் உயர்த்தப்பட்ட படுக்கை நாற்றங்கால் முறையில் விதைக்கப்பட வேண்டும். (செம்மண், மணல் மற்றும் மாட்டு சாணம் கலந்து).
- விதைப்பு காலம்: ஜனவரி - மார்ச் (கோடை பயிர்), ஜூன் - ஆகஸ்ட் (மழை காலப் பயிர்).
- முளைப்பு: 8-10 நாட்களில் 4-5 வாரங்களில் நாற்றுகள் மாற்றுவதற்கு தயாராகும்.

**நிலம் தயாரித்தல் மற்றும் நடவு**

- நிலத்தை ஆழமாக உழுது, பாசன நீர் நன்கு ஊடுருவும் வகையில் சமவெளி தயாரிக்க வேண்டும்.
- 20 - 25 டன் ஹெக்டேர் நன்கு அழுகிய தொழுஉரத்தை (FYM) இறுதி நிலத் தயாரிப்பின் போது கலக்க வேண்டும்.
- இடைவெளி: குட்டை வகைக்கு 30X30 செ.மீ., உயரமான வகைக்கு 45X30 செ.மீ.
- ஆரோக்கியமான நாற்றுகளை மாலை நேரத்தில் மாற்றி, பின்னர் நீர்பாய்ச்ச வேண்டும்.

**உரமிடுதல்**

- அடி உரம்: N:P:K 60:40:40 கிலோ/ஹெக்டேர்.
- பாதி நைட்ரஜன் + முழு பாஸ்பரஸ் & பொட்டாசியம் நடவு நேரத்தில்.
- மீதி நைட்ரஜன் 30 மற்றும் 50 நாட்களில் இரு தவணைகளாக பக்கவாட்டில் கொடுக்க வேண்டும்.
- 1% யூரியா அல்லது 2% DAP இலைவழி தெளித்தல் தலை வளர்ச்சி மற்றும் மலர்ச்சியை அதிகரிக்கும்.

**நீர்ப்பாசனம்**

மிதமான ஆனால் சீரான நீர்ப்பாசனம் தேவை. நாற்று மாற்றியவுடன் உடனடியாக நீர் பாய்ச்ச வேண்டும். பின்னர் 7-10 நாட்களுக்கு ஒருமுறை பாசனம் செய்ய வேண்டும். நீர் தேக்கம் ஏற்பட்டால் வேர் அழுகல் ஏற்படும்.

**இடைநடவு பராமரிப்பு**

- களை எடுப்பு மற்றும் இடை உழுதல் அவசியம்.
- உலர்ந்த இலைகள் அல்லது மெல்லிய நெகிழிப்படலத்தாள் ஈரப்பதம் காக்கவும், களைகளைத் தடுக்க உதவும்.
- சில வகைகளில் முகப்பு மொட்டு கிள்ளி விடுதல் (pinching) மூலம் விளைச்சலை அதிகப்படுத்தலாம்.

**பூச்சி & நோய் மேலாண்மை**

**பூச்சிகள்:**

- இலைத் தின்னிகள், நாவாய் இலைப்பேன் வேம்பெண்ணெய் (3%) அல்லது இமிடாக்லோப்ரிட் 0.3 மி.லி/லி தெளிக்கவும்.

**நோய்கள்:**

- இலைத் தழும்பு - (Cercospora) மாங்கோசெப் 2 கிராம்/லி.
- வேர் அழுகல் (Fuscarium) - கார்பண்டசிம் 1 கிராம்/லி.
- பொடி பூஞ்சை - சல்பர் 2 கிராம்/லி.

**அறுவடை மற்றும் விளைச்சல்**

- **கொய் மலர் வகைகள்:** முழுமையாக மலர்ந்திருக்க வேண்டும் ஆனால் நிறம் குன்றும் முன் அறுத்தல் சிறந்தது
- **உதிரி மலர் வகைகள்:** மலர்கள் முழு நிறத்துடன் வந்ததும் பறிக்கலாம். **மகசூல்** : சுமார் 10-12 டன் ஹெக்டேர் உதிரி மலர்கள் அல்லது 23 லட்சம் கொய் மலர்கள் ஹெக்டேர்.


**❋ தோட்டக்கலைத்துறை கட்டுரை ❋**

**அறுவடை பிந்தைய பராமரிப்பு**

- மலர்கள் காலை நேரத்தில் பறிக்கவேண்டும்.
- வகைப்படுத்திக் கட்டுகளாக அல்லது பெட்டிகளில் நிரப்பிச் சந்தைக்கு அனுப்பலாம்.
- நீண்ட நாட்கள் வைப்பதற்கு சுக்ரோஸ் + சில்வர் நைட்ரேட் கரைசலில் தெளிப்பது நல்லது.

முனைவர்.நவீனா
உதவிப் பேராசிரியர்
தோட்டக்கலைத் துறை
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி

# வானவில் விவசாயம்



ஒரு சிறிய கிராமத்தில் குழந்தைகள் தினமும் விளையாடிக் கொண்டு இருந்தார்கள். அங்கே ஒரு நல்ல உழவன் இருந்தான். அவன் பிள்ளைகளிடம், வானவில் போல நம் வயலும் அழகாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பயிரும் ஒரு நிறம் போல என்று சொன்னான். அவன் வயலில் சிவப்பு மிளகாய், மஞ்சள், பூண்டு, பச்சைப்பயிறு, நீல நிற நீர்நிலைக் கீரை, ஊதா கத்தரிக்காய் போன்றவற்றை பயிரிட்டான்.

வயல் பார்த்தவுடன் வானவிலின் ஏழு நிறங்களும் தெரிந்தது போல இருந்தது. கிராம மக்கள் அதைப் பார்த்து வானவில் விவசாயம் என்று அழைத்தார்கள். குழந்தைகள் தினமும் வயலுக்கு ஓடி வந்து, அந்த நிறங்களை ரசித்து மகிழ்ந்தனர். அந்த உழவன் எப்போதும் பிள்ளைகளுக்கு, விவசாயம் ஒரு வானவில் மாதிரி. உழைப்பும், இயற்கையும் சேர்ந்து வாழ்க்கையை அழகாக்கும் என்று கற்றுக் கொடுத்தான்.

கதை சொல்லும் நெறி: விவசாயம் **இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை; அது நம் வாழ்வில் நிறங்களை சேர்க்கும்.**

❋ தோட்டக்கலைத்துறை கட்டுரை❋



# காய்கறிகளில் மைக்ரோகிரீன்ஸ்: ஊட்டச்சத்து நிறைந்த நவீன உணவு

**முன்னுரை:**

நம் அன்றாட வாழ்க்கையில் மைக்ரோகிரீன்ஸ் நமக்கு தேவையான ஊட்டச்சத்துகளை வழங்குகிறது என்பதனை, தோட்டக்கலை மற்றும் உணவியல் துறைகள் பரிந்துரைத்துள்ளன. இவை சிறிய ஊட்டசத்து உணவுகள் அல்லது செயல்பாட்டு உணவுகள் என அழைக்கப்படுகின்றது. ஏனெனில் இவையிலுள்ள வைட்டமின்கள், கனிமங்கள் மற்றும் உயிர்ச்செயல்பாட்டு சேர்மங்கள் அதிக அளவில் உள்ளன. ஆய்வில், மைக்ரோகிரீன்ஸ்களில், முழுமையாக வளர்ந்த காய்கறிகளைவிட 30 - 40 சதவீதம் அதிக ஊட்டச்சத்துக்கள் இருப்பதை நிரூபித்துள்ளனர்.

**மைக்ரோகிரீன்ஸ் என்றால் என்ன?**

மைக்ரோகிரீன்ஸ் என்பது காய்கறிகள், கீரைகள் அல்லது தானியங்களின் மென்மையான, குறுநிலை இலைகள் ஆகும். இவை முளைத்த 7- 21 நாட்களுக்குள் அறுவடை செய்யப்படுகின்றன. இவை ஸ்பிரவுட்ஸை (Sprouts) விட பெரியவை ஆனால் பேபி லீவ்ஸை விட சிறியவை. பொதுவாக, மண்ணில் அல்லது ஹைட்ரோபோனிக் படுகைகளில் வளர்க்கப்பட்டு, வேர் பகுதியின் மேல் சிறிது உயரத்தில் வெட்டி அறுவடை செய்யப்படுகின்றன.

**பொதுவான காய்கறி மைக்ரோகிரீன்ஸ்**

1. **பிராசிகேசியே குடும்பம்:** ப்ராக்கோலி, முள்ளங்கி, கடுகு, கேல், முட்டைக்கோஸ்
2. **அபியேசியே குடும்பம்:** காரட், செலரி.
3. **அமராந்தேசியே குடும்பம்:** பீட்ரூட், பசலை, தண்டுக்கீரை
4. **லெக்யூமினோசே குடும்பம்:** பட்டாணி, கொண்டைக்கடலை, வெந்தயம்

**காய்கறி மைக்ரோகிரீன்ஸ்களின் நன்மைகள்**

மைக்ரோகிரீன்ஸ்களை வழக்கமாக உணவில் சேர்த்தால் பல்வேறு ஆரோக்கிய நன்மைகள் கிடைக்கின்றன.

1. **நோய் எதிர்ப்பு சக்தி:** வைட்டமின் மற்றும் ஆன்டிஆக்ஸிடென்ட்கள் உடல் பாதுகாப்பை வலுப்படுத்தும்.
2. **இதய ஆரோக்கியம்:** பொட்டாசியம், மக்னீசியம் மற்றும் பிளேவனாய்ட்கள் இரத்த அழுத்தத்தை குறைத்து, இரத்தக் குழாய்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.

3. **புற்றுநோய் தடுப்பு:** ப்ராசிகா வகை மைக்ரோகிரீன்ஸ்களில் உள்ள குளுக்கோசினோலேட் மற்றும் சல்போராஃபேன் புற்றுநோயைத் தடுக்கும்.

4. **இரத்தச் சர்க்கரை கட்டுப்பாடு:** வெந்தயம் மற்றும் பட்டாணி மைக்ரோகிரீன்ஸ் குளுக்கோஸ் மாற்றுச்செயலுக்கு உதவி செய்து நீரிழிவு நோயாளிகளுக்கு பயனளிக்கும்.

5. **செரிமானம் மேம்பாடு:** அதிக நார்ச்சத்து குடல்நலத்தை மேம்படுத்தி மலச்சிக்கலைத் தடுக்கிறது.

6. **கண் ஆரோக்கியம்:** லூட்டீன் மற்றும் ஸீஜாந்தின் போன்ற கரோட்டினாய்ட்கள் வயது சார்ந்த கண் பிரச்சனைகளைத் தடுக்கும்.

7. **அணுபுணர்ச்சி எதிர்ப்பு:** ஃபெனாலிக் சேர்மங்கள் உடலில் ஆக்ஸிடேட்டிவ் ஸ்ட்ரெஸ் மற்றும் நீண்டகால அழற்சியை குறைக்கும்.

8. **எலும்பு வலிமை:** வைட்டமின் K எலும்புகளில் கால்சியம் உறிஞ்சுதலை மேம்படுத்தி வலிமையூட்டுகிறது.

**காய்கறி மைக்ரோகிரீன்ஸ் சாகுபடி**

மைக்ரோகிரீன்ஸ்களை வீட்டுத் தோட்டம், செங்குத்து வேளாண்மை (Vertical farming) அல்லது வணிக பாதுகாப்பு கட்டமைப்புகளில் எளிதாக வளர்க்கலாம்.

**செயல்முறை:**

- **விதைத் தேர்வு:** சிகிச்சை செய்யப்படாத, முளை வீதம் அதிகம் கொண்ட காய்கறி விதைகளைப் பயன்படுத்தவும்.



- **வளரும் இடம்:** மண், கோகோப்பீட், பெர்லைட் அல்லது ஹைட்ரோபோனிக் மேடைகள்.

- **விதைத்தல்:** விதைகள் அடர்த்தியாக விதைக்கப்பட்டு சீராக முளைப்பதற்காக மெதுவாக அழுத்தப்படுகின்றன.

**நீர்ப்பாசனம்:** சிறிய நீர்மூட்டல் (fine mist) அல்லது கேப்பிலரி முறை மூலம் நீர் அளிக்கவும்.

**அறுவடை:** 13 வாரங்களில் வேர் பகுதியின் மேலே வெட்டி அறுவடை செய்யலாம்.

**முடிவுரை:**

மைக்ரோகிரீன்ஸ் நவீன உணவுக் கலாச்சாரத்தில் ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் நிலைத்தன்மையின் சிறந்த இணைப்பாகும். அதிக ஊட்டச்சத்து, குறுகிய வளர்ச்சி காலம் மற்றும் பல்வேறு சூழல்களில் சாகுபடி செய்யும் திறன் ஆகியவற்றால், இவை வீட்டு பயன்பாடு மற்றும் வணிக உற்பத்திக்கான சிறந்த தீர்வாக அமைகின்றன. தினசரி உணவில் மைக்ரோகிரீன்ஸ்களைச் சேர்ப்பது சுவை மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு, நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கிறது. எனவே, எதிர்காலத்தில் மைக்ரோகிரீன்ஸ் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்தும் புதிய, நிலையான வழிமுறையாக விளங்கும்.

ஆ. நித்யானந்தம்,
உதவி பேராசிரியர் தோட்டக்கலைத் துறை
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி



# சிவப்புத் தண்டு கீரை:
## நகர வேளாண்மையின் சத்தான இலைக் காய்கறி

**முன்னுரை:**

இந்தியாவில் தினசரி உணவுப் பழக்கத்தில் காய்கறிகள் முக்கியமான கூறாக உள்ளன. பொதுவாக பயன்படுத்தப்படும் இலை வகை காய்கறிகளில், சிவப்புத் தண்டு கீரை என்பது இந்தியா முழுவதும் மக்கள் அதிகமாக உண்ணும் மிகவும் பிரபலமான கீரை வகையாகும்.

இந்தியாவின் எந்தக் காய்கறி சந்தையிலும் காலடி எடுத்து வைத்தாலும், இந்தக் கீரைக் கட்டுகள்தான் கண்ணில் படும். சமையலறையில் சுவையை மட்டுமல்லாமல், உடல்நலத்திற்கும் பெரும் பயனளிக்கும் சத்துக்களால் நிரம்பிய களஞ் சியமாக இக்கீரைகள் விளங்குகின்றன. இன்று நகரங்களில் வேகமாக வளர்ந்து வரும் கூரைத் தோட்டமுறையில் பயிரிடுதல் மற்றும் நவீன நகர வேளாண்மையின் தேவைகளுக்கும் இவை சிறப்பாக பொருந்துகின்றன. சுலபமாக வளர்த்துப் பராமரிக்கக்கூடிய தன்மையால், இவை நகர வாழ்வில் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை ஊக்குவிக்கின்றன.

**சிவப்புத் தண்டங்கீரையின் முக்கியத்துவம்**

சிவப்புத் தண்டங் கீரையில் புரதம், நார்ச்சத்து, இரும்பு, கால்சியம், வைட்டமின் சி, பீட்டா போன்றவை மிகுதியாக உள்ளன. மேலும், பேட்டலைன்ஸ், பெட்டாசயனின்ஸ் போன்ற ஆக்சிடேண்ட் எதிர்ப்பு மூலக்கூறுகள் கூட இருப்பதால், ஆரோக்கியத்திற்கு கூடுதல் பலன்கள் கிடைக்கின்றன. இவை முளைத்த 25 நாட்களுக்குள் அறுவடை செய்யப்படுகின்றன.

**பயன்கள்:**

- உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்துகிறது
- இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவை உயர்த்த உதவுகிறது
- பசுமை உணவுப் பாதுகாப்பு மற்றும் தன்னிறைவு வேளாண்மை நோக்கில் முக்கிய பங்கு வகிக்கிறது.

வேகமாக வளரும் தன்மை, குறுகிய காலத்தில் விளைச்சல் தரும் திறன், வறட்சி, வெப்பம், பூச்சி, நோய்கள் போன்ற சூழ்நிலைகளில் கூட எளிதாக வளரக்கூடிய தன்மை ஆகிய காரணங்களால், விவசாயிகளுக்கும் வீட்டுத் தோட்டக்காரர்களுக்கும் மிகவும் பிடித்தது. நகரங்களில் சிறிய குடுவைகள், மாடித் தோட்டங்கள் அல்லது செங்குத்து விவசாய முறைகளில் எளிதாக வளர்த்துக் கொள்ளலாம்.

**100 கிராம் சிவப்புத் தண்டங்கீரையின் ஊட்டச்சத்து தகவல்:**

| ஊட்டச்சத்து கூறுகள் | அளவு (100 கிராம்) |
|---|---|
| கலோரி | ~23 kcal |
| புரதம் | ~2.1 gm |
| கொழுப்பு | ~0.3 gm |
| கார்போஹைட்ரேட் | ~4.1 gm |
| நார்ச்சத்து | ~2.2 gm |
| கால்சியம் | ~215 mg |
| இரும்புச்சத்து | ~2.3 mg |
| பொட்டாசியம் | ~300 mg |
| வைட்டமின் | ~6100 IU |
| வைட்டமின் | ~43 mg |



தேங்காய் நார், மண்புழு உரம், மணல் ஆகிய விகிதங்களின் சேகரிப்பு மற்றும் கலவை

### மண் இல்லாமல் சிவப்புத் தண்டங்கீரை சாகுபடி எப்படி?

மண்ணில் வளர்ப்பது எளிது என்றாலும், மண் இல்லாமல் குடுவைகளில் எந்த வகை கலவையை பயன்படுத்துவது சிறந்தது என்பதில் தெளிவான பரிந்துரைகள்



**வினா:**

பசுமைப் புரட்சி காலத்தில் தமிழ்நாட்டில் முதன்மையாக விருத்தி பெற்ற பயிர்கள் எவை?

பதில்: நெல் மற்றும் கோதுமை

இல்லை. பொள்ளாச்சியில் உள்ள வாணவராயர் வேளாண்மைக் கல்லூரி ஆய்வாளர்கள் இதற்கான பதிலைத் தேடினர். அவர்கள் தேங்காய் நார், மண்புழு உரம், மணல் ஆகியவற்றின் விகிதங்களை மாற்றி மாற்றி, 7 வகையான வளர்ப்பு கலவைகளைச் சோதித்தனர்.

### ஆய்வின் முடிவுகள்

சிவப்புத் தண்டங்கீரையின் வளர்ச்சிக்குத் தேங்காய் நார் மட்டும் போதவில்லை. அது வேர்களுக்கு பிடித்தம் கொடுத்தாலும், சத்துக்கள் இல்லாததால் கீரை சிறியதாகவும், பலவீனமாகவும் வளர்ந்தது. ஆனால் தேங்காய் நாரை மண்புழு உரத்துடன் கலந்து பயன்படுத்தியபோது தான் அற்புதமான விளைவு கிடைத்தது. குறிப்பாக 1:1 விகிதத்தில் தேங்காய் நார், மண்புழு உரம் பயன்படுத்திய போது:

- தண்டுகள் வலிமையுடனும், இலைகள் அகலமாகவும் வளர்ந்தன.
- செடிகள் சுமார் 25 செ.மீ உயரம் வளர்ந்தன
- வேர்கள் நீளமாகவும், ஆரோக்கியமாகவும் வளர்ந்து, அதிக சத்துக்களை உறிஞ்சின



மண்ணில்லா பயிர் முறையில் சிவப்பு தண்டங்கீரை (CO 6) வகையுடன் மேற்கொள்ளப்பட்ட குடுவை பயிர் பரிசோதனை

- ஒரு குடுவையில் 61 கிராம் பசுமையான கீரை கிடைத்தது (தேங்காய் நார் மட்டும் இருந்த குடுவையில் 20 கிராம் தான்)
- தழை சத்து, மணி சத்து, சாம்பல் சத்து போன்ற முக்கிய சத்துக்கள் அதிகமாக உறிஞ்சப்பட்டன

தேங்காய் நார், மண்புழு உரம் இந்த இரண்டு கலவையையும் சமநிலையில் கலந்தால் தான் சிறந்த சத்துக்களையும், ஈரப்பதத்தையும், காற்றோட்டத்தையும் கொடுத்தது. மணல் சேர்த்ததால் வடிகால் சீராக இருந்தாலும் சத்துக்கள் குறைந்ததால் விளைச்சல் மிதமானதாக இருக்கும்.


**நகர வேளாண்மைக்கு ஏன் இது முக்கியம்?**

- **கழிவுகளின் மறுசுழற்சி** தேங்காய் நார், மண்புழு உரம், சமையலறை கழிவுகள் பயனுள்ள வளமாக மாறுகின்றன
- **இயற்கை உரங்கள்** - மண்புழு உரம் இயற்கையாகவே சத்துக்களை அளிக்கும், இரசாயன உரங்களின் தேவையை குறைக்கும்
- **ஆரோக்கியமான உணவு** - சந்தையில் வாங்காமல், வீட்டிலேயே பசுமையான கீரை பெறலாம்

**முடிவுரை:**

நகர வளர்ச்சியால் விவசாய நிலங்கள் குறைந்து கொண்டிருக்கின்றன. ஆனால் காய்கறிகளின் தேவைகள் தொடர்ந்து அதிகரிக்கின்றன. சிவப்புத் தண்டங்கீரை நவீன உணவுக் கலாசாரத்தில் ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் நிலைத்தன்மையின் சிறந்த இணைப்பாகும். சிறிய கூரைகளும் சிறிய பண்ணைகளாக மாறலாம். அதிக ஊட்டச்சத்து, குறுகிய வளர்ச்சி காலம் மற்றும் பல்வேறு சூழல்களில் சாகுபடி செய்யும் திறன் ஆகியவற்றால், இவை வீட்டு பயன்பாடு மற்றும் வணிக உற்பத்திக்கான சிறந்த தீர்வாக அமைகின்றன.

ந. இலக்கியா, உதவி பேராசிரியர்
மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல்
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி





# புல் வெட்டும் இயந்திரம் (Brush Cutter) விவசாயியின் நம்பிக்கை கருவி

**முன்னுரை:**



இன்று விவசாயத்தில் தொழில்நுட்ப உபயோகம் அதிகரித்துவிட்டது. அதில் முக்கியமாகச் சிறிய அளவில் அதிக உழைப்பைச் சேமிக்கும் கருவியாக புல் வெட்டும் இயந்திரம் (Brush Cutter) பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

**பயன்பாடு**

- நெல், கரும்பு, சோளம் போன்ற பயிர்களின் இடையே வளர்ந்த களைகளை எளிதில் அகற்றலாம்.
- தோட்டங்களில் புல் வெட்ட, காப்பி, தேயிலை, தேங்காய் தோட்ட பராமரிப்புகளிலும் உதவுகிறது.
- புல்வெளி (Lawn) பராமரிப்பிற்கும் உகந்தது.

**சிறந்த மாடல்களின் ஒப்பீடு சுருக்கமாக**

| மாடல் / பிராண்ட் | எஞ்சின் வகை | சிறப்பம்சங்கள் | பயன்பாடுகள் |
|---|---|---|---|
| Honda UMK450T | 4-Stroke | முன்னணி தரம், எரிபொருள் சேமிப்பு, அதிர்வு குறைவு | தொழில்முறை/கடினப் பணி |
| Neptune BC-360 | 2-Stroke | மலிவான, இலவச அபரிமாற்றம் | வீட்டுத்தர, சிறிய நிலங்களுக்கு |
| Balwaan BX-35B (Backpack) | 4-Stroke | எளிதாகத் தாங்கும் வடிவமைப்பு, குறைந்த சத்தம் | நடுத்தர/பெரிய பண்ணை பயன்பாடுகள் |
| Husqvarna 143R-II | 2-Stroke | வலுவான, எரிபொருள் திறன், எளிதான தொடக்கம் | தொழில்முறை நிலங்கள் |
| Neptune BC-1200E (Electric) | Electric | மின்சாரம் பயன்படுத்தி, குறைந்த சத்தம், எளிதான கையாளுதல் | நகர்ப்புற தோட்டக்கலைப் பயிர்ச்செயலாளர் |
| Kisankraft KK-BC2-52T | 2-Stroke (Trolley) | டிராலி வடிவமைப்பு, பலவகைப் பயன்பாடு | பெரும் தோட்டங்கள், சமநிலைற்ற நிலம் |

## ❋வேளாண் பொறியியல் துறை❋

**நன்மைகள்**

- **வேகமான பணி**: கைகளால் வெட்டும் வேலைக்கு குறைந்தது 5 - 6 மணி நேரம் ஆகும். அதுவே Brush cutter பயன்படுத்தினால் அதே வேலை இரண்டு மணி நேரத்தில் முடியும்.
- **வேளாண் பணியாளர்கள் பற்றாக்குறைக்கு தீர்வு**: தொழிலாளர்களுக்காக, காத்திடாமல் பண்ணையாளர்கள் தானே உபயோகிக்க முடியும்.
- **பலவகை பயன்பாடு**: புல் வெட்டுதல், புதர் அகற்றுதல், சில மாதிரிகளில் கத்தி மாற்றி மரக்கிளைகளை வெட்டவும் செய்யலாம்.
- **எளிதான இயக்கம்**: எடை குறைவாக இருப்பதால் ஒருவரே எளிதில் பயன்படுத்த முடியும்.

**குறைகள்**

- எரிபொருள் (பெட்ரோல்/டீசல்) செலவு இருக்கும்.
- சரியான பராமரிப்பு செய்யவில்லை என்றால் இயந்திரத்தில் அடிக்கடி பழுது ஏற்படும்.
- தொடக்கத்தில் பயன்படுத்த பழக சிறிது சிரமம் இருக்கலாம்.

**விவசாயிகளின் அனுபவம்**

மீனாட்சிபுரம் பகுதியை சேர்ந்த திரு. பிரவீன் அவர்கள் 2 ஏக்கர் நிலத்தில் பயன்படுத்தி பார்த்தோம். ஒருநாள் முழுக்க 5 தொழிலாளிகள் வேலை செய்ய வேண்டியது 2 மணி நேரத்தில் முடிந்தது.

தேயிலை தோட்டத்தில் புல் வெட்ட மிகவும் உதவுகிறது. தொழிலாளி செலவைக் குறைக்கிறது.

**முடிவுரை:**

Brush cutter என்பது சிறிய விவசாயிகளுக்கும் பெரிய தோட்டங்களுக்கும் பயனுள்ள கருவி. வேலை நேரத்தைச் சேமிக்கிறது, உழைப்பைக் குறைக்கிறது, வருமானத்தை அதிகரிக்கிறது. சரியான பராமரிப்பும், பயன்பாடும் செய்தால் இது விவசாயின் நம்பிக்கைக்குரிய நண்பன் ஆகிவிடும்.


முனைவர். கா. காளிதாஸ்
இணை பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் பொருளாதாரத் துறை
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி.


**வினா:** “ஸ்பைஸ் ரெவல்யூஷன்” தமிழ்நாட்டில் எந்த வகை பொருட்களுடன் தொடர்புடையது?

பதில்: மஞ்சள், இஞ்சி, கறிவேப்பிலை






**வினா:** தமிழ்நாட்டில் மஞ்சளுக்காக பிரசித்தி பெற்ற மாவட்டம் எது?

பதில்: ஈரோடு



*வேளாண் பொருளாதாரக் கட்டுரை*

# அமெரிக்கா விதிக்கும் புதிய வரி இந்திய விவசாய ஏற்றுமதிக்கு ₹48,000 கோடி பாதிப்பு?

**வணிக பார்வை**

கடந்த 1, ஆகஸ்ட் 2025 முதல் அமெரிக்கா இந்தியாவின் விவசாய மற்றும் செயலாக்க உணவுப் பொருட்கள்மீது 25% இறக்குமதி வரி (tariff) விதிக்கவுள்ளதாக அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு, இந்தியாவின் ஏற்றுமதித் துறையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, பாஸ்மதி அரிசி, கடல்சார்ந்த பொருட்கள், மசாலா வகைகள், பால் மற்றும் பழச்சாறு சார்ந்த தயாரிப்புகள் ஆகியவை நேரடியாக பாதிக்கப்பட உள்ளன.

## இந்தியா ஒரு விவசாய ஏற்றுமதி வல்லரசு

2024-25 ஆண்டில், இந்தியா $5.81 பில்லியன் (₹48,000 கோடிக்கு மேல்) மதிப்புள்ள, 1.52 மில்லியன் மெட்ரிக் டன் விவசாய மற்றும் செயலாக்க உணவுப் பொருட்களை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

| தயாரிப்பு | மதிப்பு (USD மில்லியன்) | அளவு (MT) |
|---|---|---|
| கடல் சார்ந்த பொருட்கள் | 2,681.19 | 342,534.27 |
| மசாலா பொருட்கள் | 654.71 | 110,836.47 |
| பாஸ்மதி அரிசி | 337.10 | 274,213.00 |
| பால் (ம) பால் தயாரிப்புகள் | 205.32 | 86,829.91 |
| செயலாக்க பழச்சாறுகள் | 161.42 | 96,521.96 |

**வரிவிதிப்பு மூலம் ஏற்படக்கூடிய முக்கிய தாக்கங்கள்:**

### 1. விலைப் போட்டி பாதிப்பு

இந்திய பாஸ்மதி அரிசி, மசாலா மற்றும் மீன்கள் போன்ற உற்பத்திகள், தற்போது அமெரிக்க சந்தையில் விலைநிலைக்கு இணையான போட்டியில் உள்ளன. 25% வரி கூடுதல் இறக்குமதி செலவாகவும், வாடிக்கையாளர்களின் விருப்ப மாற்றமாகவும் அமையும்.

### 2. விநியோக தொடரில் சிக்கல்கள்

அமெரிக்கா, குறிப்பாக இந்திய கடல்சார்ந்த பொருட்களுக்கு முக்கியமான இறக்குமதி நாடாகும். வரி காரணமாக உற்பத்தியாளர் இறக்குமதியாளர் இடையிலான ஒப்பந்தங்கள் மீள மதிப்பீடு

செய்யப்படலாம். அதுவே, சப்ளை செயின் தடையையும் விற்பனை வீழ்ச்சியையும் உருவாக்கும்.

**3. புதிய சந்தைகளுக்கான தேடல்**

ஜப்பான், ஐரோப்பிய யூனியன், மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவை, இந்தியா ஏற்கனவே வர்த்தகம் நடத்தும் சந்தைகளாக இருந்தாலும், இப்போது அவற்றை விரிவுபடுத்தும் தேவை ஏற்படுகிறது. சிறு மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர்களுக்கு இது புதிய சவால்களையும், செலவுகளையும் உருவாக்கும்.

**4. அதிக இறக்குமதி செலவுகள் குறைந்த லாபம்**

செயலாக்க உணவுப் பொருட்கள், பால் தயாரிப்புகள் மற்றும் பழச்சாறுகளுக்கான இறக்குமதி செலவுகள் அதிகரிப்பதால், வணிக லாபத் தொகை குறைந்து, சில நேரங்களில் மொத்த வர்த்தகமும் நஷ்டமாகும் அபாயம் உருவாகிறது.


**தீர்வுகளுக்கான வாய்ப்புகள்**

| நடவடிக்கை | விளக்கம் |
|---|---|
| விற்பனை சந்தை விரிவாக்கம் | இந்தியா புதிய ஏற்றுமதி சந்தைகளை நோக்கிச் செல்ல வேண்டும் –ASEAN நாடுகள், ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்றவை. |
| உற்பத்தி கட்டண மதிப்பீடு | MSME மற்றும் உற்பத்தியாளர் கூட்டுறவுகள், புதிய வரிவிதிப்பை மையமாகக் கொண்டு உள்நாட்டு செலவுகளை மீள மதிப்பீடு செய்ய வேண்டும். |
| இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தை | இந்திய அரசு அமெரிக்காவுடன் இருதரப்பு விவாதங்களை துரிதப்படுத்தி, முக்கிய உற்பத்திகளை வரிவிலக்கு பெற முயற்சிக்க வேண்டும். |
| தொழில்நுட்பம் மற்றும் தர நிர்வாகம் | ஏற்றுமதி தரநிலைகளை மேம்படுத்தி, இந்திய உற்பத்திகளுக்கு premium position விற்பனை இடத்தை உருவாக்கலாம். |

**வருமானத்துக்கே எச்சரிக்கை**

இந்தியாவின் விவசாய ஏற்றுமதி, கிராமப்புற வாழ்க்கை, விவசாய வருமானம், மற்றும் மாநில அரசுகளின் வருவாய் ஆகியவற்றில் நேரடியாக பங்களிப்பு அளிக்கிறது. நீடித்த வரி கட்டாயங்கள், விவசாய உற்பத்தியாளர்களின் நம்பிக்கையையும், வர்த்தக இடையீடுகளையும் பாதிக்கும் அபாயம் அதிகம். நேர்முக நடவடிக்கைகள், சந்தை திசை மாற்றங்கள் மற்றும் கொள்கை தலையீடுகள் மட்டுமே, இத்தகைய பிரச்சனையிலிருந்து இந்தியாவை காப்பாற்றக்கூடியவை.

முனைவர். கா. காளிதாஸ்
இணை பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் பொருளாதாரத் துறை
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி.




# வேளாண் சுற்றுலா தமிழ்நாட்டின் பசுமைச் செல்வத்தின் புதிய முகம்

**வணிக பார்வை**

இன்றைய நகர வாழ்க்கை பளு, காற்று மாசு, சத்தமிகுந்த சூழல் இவற்றிலிருந்து தப்பிக்க, மக்கள் இயற்கையின் மடியில் ஓய்வு தேடுகிறார்கள். அப்படிப் போகும் இடமாக தமிழ்நாட்டின் பசுமை வயல்களும், பண்ணைகளும் மெல்ல மெல்ல சுற்றுலா இடங்களாக மாறி வருகின்றன. இதுவே வேளாண் சுற்றுலா!

**வேளாண் சுற்றுலா என்றால் என்ன?**

சாதாரணமாக சுற்றுலாக்கள் கடற்கரை, மலை, கோயில் ஆகியவற்றைக் காண்பது வழக்கம். ஆனால் இப்போது அவர்கள் பசுமையான வயலில் கால் வைப்பது, நெல் அறுவடையில் பங்கேற்பது, பசும் பால் கறப்பது, பாரம்பரிய உணவை சுவைப்பது போன்ற அனுபவங்களை விரும்புகிறார்கள். கிராம வாழ்க்கையை நேரடியாக உணரும் அனுபவம் அதுவே வேளாண் சுற்றுலா.

**தமிழ்நாட்டின் சிறப்புகள்**

தமிழ்நாடு என்றாலே வளமான விவசாய நிலம் நினைவுக்கு வரும்.

**தஞ்சாவூர் - திருச்சி:** நெல் வயல்களின் செழிப்பு.

**நீலகிரி - கோயம்புத்தூர்:** தேயிலை, காப்பி தோட்டங்களின் மயக்கம்.

**கன்னியாகுமரி:** வாழை, தேங்காய், மலைகடல் கலந்த இயற்கை.

**✳ வேளாண் விரிவாக்கத்துறை கட்டுரை✳**

**மதுரை - இராமநாதபுரம்:** பாரம்பரிய பாசன முறைகள், உப்பு உற்பத்தி.

இந்தப் பகுதிகள் அனைத்தும் சுற்றுலாக்கள் அனுபவிக்க வேண்டிய அற்புதமான இடங்களாக திகழ்கின்றன.

**கிடைக்கும் நன்மைகள்**

விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் உற்பத்தி மட்டும் அல்லாமல் டூரிஸ்ட்களை வரவேற்பதன் மூலமும் சம்பாதிக்கலாம்.

கிராமத்துக்கு வேலை வாய்ப்பு சமையல், வழிகாட்டுதல், தங்கும் வசதி போன்ற துறைகளில் உள்ளூர் மக்களுக்கு வேலை.

கலாச்சார பராமரிப்பு நாட்டுப்புற பாடல், நடனம், உணவு ஆகியவை உலகளவில் அறிமுகமாகின்றன.

இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு பண்ணை சுற்றுலா மூலம் கிராமத்து இளைஞர்களை தொழில்முனைவோராக மாறுகிறார்கள்.

இயற்கை பாதுகாப்பு விவசாயத்தின் முக்கியத்துவம் சுற்றுலாக்களிடமும் ஆழமாக பதிகிறது.

**எதிர்காலம்**

நகர வாழ்க்கையில் சலிப்படைந்தவர்களுக்கு கிராம பண்ணைகள் ஓர் ஓய்விடம். விவசாயிகளுக்கு வருமானம், சுற்றுலாகளுக்கு அனுபவம், தமிழகத்துக்கு பெருமை மூன்றையும் சேர்த்துத் தரும் பாலமாகவே வேளாண் சுற்றுலா உருவாகி வருகிறது.

முனைவர். ரா. ரவிக்குமார்
முனைவர். கா. காளிதாஸ்
இணை பேராசிரியர்கள்
வேளாண் பொருளாதாரத் துறை
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி.

***வயலில் பயிரும், கிராமத்தில் சுற்றுலாவும்
தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான இரட்டை எரிபொருள்!***

## விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி

*ஆப்பிரிக்க விவசாயிகள் தங்கள் பயிர்களை வனவிலங்குகளிடமிருந்து பாதுகாக்க மிகக் குறைந்த வளங்களைக் பயன்படுத்துகின்றனர். பயிர்களுக்கு அருகில் வரும் விலங்குகளை பயமுறுத்துவதற்கு வெடிகள் பயன்படுத்த அனுமதியில்லை.* ***யானை மற்றும் தேனீக்கள் திட்டம்*** *மூலம் அவர்களுக்கு நல்ல ஆதாயம் கிடைத்தது. இந்தத் திட்டத்தின் கீழ் அவர்கள் தங்கள் பயிர்களுக்கு அருகில் தேனீ வளர்ப்பைத் தொடங்கினர். யானைகளுக்கு தேனீக்களைப் பார்த்தாலே பயம். ஏனெனில் தேனீக்கள் கண்களின் உட்புறத்திலும், தும்பிக்கையிலும் கொட்டும் என்பதை யானைகள் நன்கு அறிந்துள்ளன. அதனால் தேனீ சத்தம் கேட்டாலே, யானைகள் உடனே திசை மாறி சென்றுவிடுகின்றன. இது யானைகளை அழிவிலிருந்து காப்பதற்கும், விவசாயிகளின் பயிர்களை பாதுகாப்பதற்கும் சிறந்த வழி என கருதப்படுகிறது. மேலும், தேனீ வளர்ப்பின் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானமும் கிடைக்கிறது.*

*யானைகளை காயப்படுத்தாமல், தேனீ வளர்ப்பதன் மூலம்
விவசாயமும், விலங்குகளும் பாதுகாக்கப்படுகின்றன.*




# குழி பணியாரம்



**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| *பச்சை அரிசி* | *1 கப்* |
| *உளுத்தம் பருப்பு* | *1/4கப்* |
| *வெந்தய விதைகள்* | *1/4கப் கப்* |
| *எண்ணெய்* | *1 தேக்கரண்டி* |
| *கடுகு* | *1 தேக்கரண்டி* |
| *உளுத்தம் பருப்பு* | *1 தேக்கரண்டி* |
| *அசாஃபெடிடா* | *1 சிட்டிகை* |
| *கறிவேப்பிலை* | *1 (கைப்பிடி)* |
| *பெரிய வெங்காயம்* | *(பொடியாக நறுக்கியது) 1* |
| *இஞ்சி* | *(பொடியாக நறுக்கியது) 1* |
| *பச்சை மிளகாய்* | *(பொடியாக நறுக்கியது) 2* |

**தயாரிப்பு முறை**

1. அரிசி, உளுத்தம் பருப்பு மற்றும் வெந்தய விதைகளை ஒரு பாத்திரத்தில் நான்கு மணி நேரம் கழுவி ஊற வைக்கவும். தண்ணீரை வடிகட்டி, கிரைண்டர் அல்லது பிளெண்டரில் மென்மையான மாவாக அரைக்கவும். மாவை ஒரு பெரிய கொள்கலனில் மாற்றவும், உப்பு சேர்த்து நன்கு கலக்கவும். அதை 68 மணிநேரம் அல்லது ஒரே இரவில் மூடவும்.

2. ஒரு கடாயில் எண்ணெய்யை சூடாக்கி, கடுகு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம், கறிவேப்பிலை சேர்த்து வதக்கவும். வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, உப்பு சேர்த்து சில நிமிடங்கள் வதக்கவும். இதை மாவில் சேர்த்து நன்கு கலக்கவும்.

3. பணியார கடாயில் எண்ணெய் சேர்த்து, ஒவ்வொரு அச்சுகளிலும் ஒரு கரண்டி மாவை ஊற்றவும். மூடி வைத்து 23 நிமிடங்கள் வேக விடவும். மெதுவாக அதை புரட்டவும், ஒவ்வொன்றும் பொன்னிறமாக மாறும் வரை சமைக்கவும்.

முனைவர். எம்.ரம்யா
உதவிப்பேராசிரியர்
உணவுத் துறை
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி

# அனிருத்க் ஃபெட் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்

## “வருடாந்திர பொதுக்குழுக்கூட்டம் மற்றும் பங்குச்சான்றிதழ் வழங்கும் விழா - 2025”



அனிருத் ஃபெட் உழவர் உற்பத்தியாளர் நிறுவனமானது 06.07.2023 அன்று நிறுவன சட்டத்தின் 2013 கீழ் பதிவு செய்யப்பட்டு கள்ளை கிராமம் தோகைமலை ஒன்றியம், கரூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்டுவருகிறது.

இந்நிறுவனமானது முழுக்க முழுக்க பெண்களை மையமாகக் கொண்டு இயங்கக்கூடிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ஆகும். வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் பெண் விவசாய பெரும் மக்களை தொழில் ரீதியாக ஊக்குவிக்கும் நன்னோக்கில் உருவாக்கப்பட்டதே இந்நிறுவனம் ஆகும்

தற்போது 316 பெண் உறுப்பினர்கள் கொண்டு கள்ளை கிராமத்தில் “உரக்கடை மற்றும் வீட்டு சமையல் உபயோக பொருட்கள் கடை” திறக்கப்பட்டு சிறப்பாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இத்துடன் நிறுவனமானது “பாரம்பரிய அரிசி வகைகள், தானிய வகைகள் மற்றும் பருப்பு வகைகள் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களையும்” தயாரித்தும் விற்பனை செய்து வருகிறது. அது மட்டுமில்லாமல் வேளாண் உற்பத்தி பொருட்களை மொத்த கொள்முதல் மற்றும் விற்பனையும் அவ்வப்போது செய்து வருகிறது.

இந்நிறுவனம் தனது முதல் "ஆண்டு பொது குழு கூட்டத்தை" ஜூலை மாதம் 21 ஆம் தேதி 2025 அன்று கள்ளை கிராமத்தில் சிறப்பாக நடத்தினார்கள்.

இதற்கு சிறப்பு விருந்தினராக குமரகுரு கல்வி நிறுவனத்தின் முதன்மை ஆராய்ச்சியாளரான முனைவர் தன்னம்மாள் ரவிச்சந்திரன் அவர்களும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, கரூர் மாவட்டத்தின் துணைப் பொதுமேலாளர் திரு. பிரபாகரன் அவர்களும் கரூர் வேளாண் அறிவியல் நிலையத்தின் தலைமை விஞ்ஞானி முனைவர். திரவியம் அவர்களும் உற்பதியாளர் நிறுவனத்தின் வழிகாட்டு நிறுவனமான வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் FPO திட்டத் தலைவர் முனைவர். காளிதாஸ், FPO திட்டத் ஒருகிணைப்பாளர் திரு. முருகாந்தம் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

அனிருத் ஃபெட் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் முக்கிய நோக்கமான பால் கொள்முதல் மற்றும் பால் மதிப்புக் கூட்டு விற்பனையை ஊக்கப்படுத்தும் நோக்கமாக இந்த ஆண்டு பொது குழு கூட்டத்தில் கால்நடைகள் பராமரிப்பு மற்றும் பால் மதிப்புக் கூட்டு விற்பனை செய்வதால் ஏற்படும் நன்மைகள் சம்பந்தமாக முனைவர். தன்னம்மாள் ரவிச்சந்திரன் தெளிவாக கூறினார்.

இந்த தலைப்பு விவசாயிகளுக்கு இடையே விவாதிக்கப்பட்டதன் விலைவாக பிற்காலத்தில் இந்நிறுவனம் பால் கொள்முதல் மற்றும் மதிப்பு கூட்டுதல் செய்வதற்கு முக்கிய பங்காக அமையும். இறுதியில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு பங்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது

ஒரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் நோக்கமும் செயல்பாடும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு மட்டுமே அமைய வேண்டும் எனும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட அனிருத் பெட் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அதன் நோக்கில் 40% வளர்ச்சியை தற்போது கண்டுள்ளது. பிற்காலத்திலும் இதன் வளர்ச்சி மென்மேலும் வளர வேண்டும் எனும் எண்ணத்தில் வழிகாட்டுதல் நிறுவனமான வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் சார்பில் FPO திட்டத் தலைவர் முனைவர் காளிதாஸ் அவர்கள் வலியுறுத்தினார்.

வேளாண் அறிவியல் நிலையம் கரூர் தலைமை விஞ்ஞானி முனைவர் திரவியம் அவர்கள் விவசாயிகளிடையே KVK செயல்பாடுகள் மற்றும் தற்போதைய வேளாண் பயிற்சி குறித்து பேசினார் மற்றும் பிற்காலத்தில் வரவிருக்கும் திட்டங்களை அனிருத் ஃபெட் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் மூலமாக செயல்படுத்த திட்டமிட்டுள்ளதாக கூறினார்.

**வினா:** தமிழ்நாட்டில் மஞ்சள் புரட்சி எந்த உற்பத்தியை ஊக்குவித்தது?

பதில்: நிலக்கடலை மற்றும் சுண்டல் எண்ணெய் விதைகள்

# லிட்ஃபெஸ்ட்

வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியில் கடந்த 8.7.2025 ஆம் தேதி "லிட்ஃபெஸ்ட" எனும் மாபெரும் இலக்கியப் போட்டி நடைபெற்றது. மாணவர்களின் கலைத்திறமையை மட்டும் வெளிக்கொண்டு வந்தால் போதாது, இலக்கண இலக்கிய திறமைகளையும் பரைசாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்நிகழ்ச்சி துவக்கிவைக்கப்பட்டது. இதுவே நம் கல்லூரியில் முதன் முறையாக நடைபெறும் மாபெரும் இலக்கிய விழாவாகும். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக வால்பாறை துணைக் காவல் கண்காணிப்பாளர். திருமதி பவித்ரா அவர்கள் வருகை தந்திருந்தார்கள். தங்களின் எழுச்சியூட்டும் பேச்சால் மாணவர்கள் அனைவரும் கூர்ந்து கவனிக்கச் செய்தார். மாணவர்களின் ஈடுபாடு படிப்பு, கலை மற்றும் விளையாட்டுப்போட்டிகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என ஊக்கமளித்தார். லிட்ஃபெஸ்ட் விழாவன்று பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. பட்டிமன்றம், நாடகம், கவிதைப் போட்டி, கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, படைப்புக் கதை எழுதுதல், கையெழுத்துப்போட்டி, திருக்குறள் ஒப்பித்தல், தமிழோடு விளையாடு போன்ற போட்டிகளில் மாணவர்கள் உற்சாகத்துடன் கலந்துக்கொண்டு போட்டியிட்டனர்.

மாணவர்கள் அனைவரும் நான்கு அணியாகப் பிரிந்துப் போட்டியிட்டனர். வெற்றியடைந்த மாணவர்களுக்குப் பரிசளித்து மேலும் இதுபோன்ற போட்டிகளில் கலந்துகொண்டு தங்கள் திறமைகளை வெளிக்கொண்டு வரவேண்டும் என கல்லூரியின் முதல்வர் முனைவர். கு. பிரபாகர் அவர்கள் தெரிவித்தார் மேலும் கல்லூரியின் இயக்குநர் முனைவர். ந. கெம்புச்செட்டி அவர்கள் அனைவரையும் பாராட்டி பேசினார்.

அனைத்து போட்டிகளிலும் சிறந்து விளங்கி அதிக மதிப்பெண் பெற்ற அணிக்கு ஒட்டுமொத்தக் கோப்பை வழங்கப்பட்டது. ஒட்டுமொத்தக் கோப்பையை "சபையர்" அணி தட்டிச்சென்றது. மாணவர்கள் அனைவரும் போட்டிகளில் பங்கேற்று பரிசு பெற்று மகிழ்ச்சியை கொண்டாடினர் இந்த நிகழ்ச்சி மாணவர்களிடையே ஊக்கத்தையும், நம்பிக்கையும் உருவாக்கியுள்ளது.

வினா: தமிழ்நாட்டில் பசுவை மையமாகக் கொண்டு பால்தரத்தை மேம்படுத்த எந்த திட்டம் முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டது?

விடை: Intensive Cattle Development Project (ICDP)

வினா: தமிழகத்தில் நீலப் புரட்சி எந்த மாவட்டங்களை அதிகம் பாதித்தது?
விடை: கடலூர் மற்றும் தூத்துக்குடி



# நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம்
## ( 20.07.2025 முதல் 26.07.2025 )

**இடம் : ஜலத்தூர், பொள்ளாச்சி**

**நாள் 1: 20.07.2025 (ஞாயிற்றுக்கிழமை)**

இந்த சிறப்பு முகாம் காலை 9.00 மணிக்கு பொதுச்சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பேரணியுடன் ஜலத்தூர் கிராமத்தில் தொடங்கிவைக்கப்பட்டது. இப்பேரணியை பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் திரு. ஆர். ரகுபதி அவர்கள், கொடியசைத்து துவக்கிவைத்தார். நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் பொதுசுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை கிராம மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் பசுமை இல்லையெனில் எதிர்காலம் இல்லை, இயற்கையின் அழகு மரங்கள்; பாதுகாப்பது நம் கடமை, சுத்தமான சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மேம்படுத்தும் போன்ற வாசகங்களை முழக்கி ஊர்வலமாக நடந்துவந்தனர். பின்னர் காலை 10.00 மணி அளவில் பள்ளி வளாகத்தை தூய்மை செய்யும் பணிகளில் ஈடுபட்டனர். இதில் பள்ளியின் முகப்பு மற்றும் பின்பகுதியில் தளங்களை சமன்படுத்துதல், களைகளை அகற்றுதல், பூந்தோட்டத்தை சீரமைத்தல், குழந்தைகள் விளையாடும் பகுதிகளை சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை நீக்குதல் போன்ற பல்வேறு செயல்பாடுகளை மாணவர்கள் மிகவும் திறம்பட நேர்த்தியாக செய்தனர். பின்பு உணவு இடைவேளைக்கு பிறகு மதியம் 02.00 மணியளவில் கோவில் வளாகத்தை தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டனர். இதில் சமூக விழிப்புணர்வுடன் மாணவர்கள் புனித இடங்களின் தூய்மையை உறுதி செய்தனர்

**இரண்டாம் நாள் (21.07.2025) திங்கட்கிழமை**

நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாமின் இரண்டாம் நாள் (21.07.2025), தூய்மை இந்தியா, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக நலனை மேம்படுத்தும் நோக்கத்துடன்

பின்வரும் பல்வேறு பணிகளை நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் உற்சாகத்துடனும், பொறுப்புணர்வுடனும் செயல் படுத்தினர்.

**1. சாலைகள் மற்றும் கிராமம் தூய்மைப்படுத்தல்:**

காலை 8:30 மணியளவில் சாலைகள் மற்றும் கிராமப்புறத்தை தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டனர். இதற்கு மாணவர்கள், குப்பைத்தொட்டி, துடைப்பங்கள், கையுறைகள், குப்பை பைகள் மற்றும் இரு சக்கர வண்டி போன்ற துப்புரவு உபகரணங்களுடன், குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, முக்கிய சாலைகள், பொது இடங்கள் மற்றும் கிராமத்திற்குள் உள்ள சிறிய பாதைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் துப்புணர்வு பணியை மேற்கொண்டனர். இந்தச் செயல்பாட்டின் நோக்கம் சுகாதாரம், நோய்த்தடுப்பு மற்றும் நிலையான சமூக நடைமுறைகளுக்கு ஒரு முன்மாதிரியை அமைப்பதாகும். இந்தத் துப்புரவுப் பணி, கழிவு மேலாண்மை மற்றும் சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்திருப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உதவியது.

**2. பள்ளிச் சுற்றுப்புறங்களை அழகுபடுத்துதல் மற்றும் சுவற்றில் ஓவியம் தீட்டுதல்:**

காலை 10:30 மணியளவில் தேநீர் இடைவேளைக்குப் பிறகு, மாணவர்கள் பள்ளி வளாகத்திற்குச் சென்று பள்ளிச் சுற்றுப்புறங்களை அழகுபடுத்துதல் மற்றும் சுவற்றில் ஓவியம் தீட்டுதல் பணிகளை செய்தனர். இதில் பள்ளியின் சுற்றுச்சுவரை முதலில் சுத்தம் செய்து பின்பு வெள்ளையடித்தனர். அதன்மேல் வர்ணங்களை பூசி ஓவியங்களை வரைந்தனர். இதில் பல்வேறு திருக்குறள்கள், சுதந்திர போராட்ட தியாகிகளான நம் தேச தந்தை மகாத்மா காந்தியடிகள், சர்தார் வல்லபாய் படேல், செக்கிழுத்த செம்மல் வா.உ. சிதம்பரம் பிள்ளை மற்றும் பள்ளிக்குழந்தைகள் எளிதாக புரியும் வகையில் மற்ற ஓவியங்களையும் வரைந்தனர். இந்த முயற்சி பள்ளியை அழகுபடுத்துவதோடு கல்வி, ஒழுக்கம், தூய்மை, சமூகப் பொறுப்புணர்வு, மற்றும் பள்ளிக்குழந்தைகளின் கற்றல் திறனை மேம்படுத்தவும் வழிவகை செய்கிறது.

**3. நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம் தொடக்க விழா:**

பிற்பகல் 2:00 மணியளவில் சிறப்பு முகாமின் தொடக்க விழா நடைபெற்றது. இந்த நிகழ்வு ஜலத்தூரில் உள்ள பொன்னுஞ்சல் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு திரு. G. இரகுபதி, (பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர்), சிறப்பு விருந்தினர் மருத்துவர், K. மூர்த்தி (SM மருத்துவமனை, பொள்ளாச்சி), திரு. S. நாகராஜன் (மக்கள் தொடர்பு அலுவலர், NIA, பொள்ளாச்சி), திருமதி N. விக்னேஸ்வரி, தலைமை ஆசிரியை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, ஜலத்தூர், திரு. சுப்பராயன் உதவி ஆசிரியர், நடுநிலைப்பள்ளி, ஜலத்தூர்), கல்லூரியின் முதல்வர், முனைவர் K.பிரபாகர், மாணவர்மன்ற ஆலோசகர், முனைவர் . R. ரவிக்குமார் மற்றும் உழவியல் துறையின் தலைவர் முனைவர் M.R. நந்தகுமார் போன்றவர்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்புப்படுத்தினர். விழாவில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர் அனைவரும் மிகவும் சிறப்பாக மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் உரையாற்றினர்.

இவ்விழாவானது மாணவர்களுக்கு ஒரு உத்வேகமாக அமைந்தது.

**மூன்றாம் நாள் (22.07.2025) செவ்வாய்க்கிழமை**

**1. ரேபீஸ் நோய் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு பேரணி:**

காலை 8.30 மணியளவில் நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் ரேபீஸ் நோய் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை நடத்தினர். இதனை நடுநிலை பள்ளியின் தலைமை ஆசிரியை திருமதி, C. விக்னேஸ்வரி அவர்கள் கொடியசைத்து தொடக்கிவைத்தார். இப்பேரணியில் மாணவர்கள், ரேபிஸ் நோய் பரவும் முறை, அதன் விளைவுகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை உணர்த்தும் வாசகங்களை வாசித்து ஊர்வலமாக நடந்துவந்தனர்.

**2. தேனீ வளர்ப்பு பற்றிய செயல் விளக்கம் மற்றும் தொழில்நுட்ப உரை:**

காலை 10.00 மணியளவில் நமது கல்லுரியின் உதவி பேராசிரியர் மற்றும் உதவி நாட்டு நலப்பணி திட்ட அலுவலர், முனைவர் H. சங்கரராமன் அவர்கள் தேனீ வளர்ப்பு பற்றிய செயல் விளக்கம் மற்றும் தொழில்நுட்ப உரையை நிகழ்த்தினார். இதில் அவர், தேனீ பெட்டியின் அமைப்பு, பயன்பாடு மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து தெளிவாக விளக்கினார். மேலும், ஒவ்வொரு பெட்டியிலும் உள்ள இராணி தேனீ மற்றும் ஆண் தேனீக்களின் எண்ணிக்கை மற்றும், அவற்றின் செயல்பாடுகள், மகரந்தச் சேகரிப்பு, தேன் சுரக்கும் நேரங்கள் போன்றவற்றையும் மிகவும்சிறப்பாகவிளக்கினார். இந்நிகழ்விற்கு சுமார் 53 வேளாண் பெருங்குடி மக்கள் கலந்துகொண்டு தேனீ வளர்ப்பு பற்றிய உத்திகளை அறிந்துகொண்டு பயனடைந்தனர்.

**3. பள்ளி வளாகத்தில் வீட்டு தோட்டம் மற்றும் மூலிகை தோட்டம் அமைத்தல்:**

மதிய உணவு இடைவெளிக்கு பிறகு 2.00 மணியளவில் நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் பள்ளியில், வீட்டு தோட்டம் மற்றும் மூலிகை தோட்டம் வளர்ப்பது பற்றிய செயல் விளக்கத்தை நிகழ்த்தினர். இதில் மாணவர்கள் பள்ளியின் பின்புறம் மற்றும் முன்பகுதியில் உள்ள பூச்செடிகளை ஒருங்கிணைத்து அழகுமிக்க தோட்டத்தை வடிவமைத்தனர். இது மிகவும் கண்கவரும் வகையில் அமைந்தது

**நான்காம் நாள் (23.07.2025) புதன்கிழமை**

**1. பெண் குழந்தைகள் கல்வி மற்றும் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு பேரணி:**

காலை 8.30 மணிக்கு பெண் குழந்தைகள் கல்வி மற்றும் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதில் மாணவர்கள் கையில் வாசக பதாகையுடன் ஊர்வலமாக சென்று பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த வாசகங்களை கூறி, மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இதன் மூலம், பெண்களின் கல்வி மேம்பாடு என்பது சமுதாய முன்னேற்றத்திற்கு அடித்தளமாக அமைகிறது என்ற கருத்தை விளக்கி பெண்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.

**2. கால்நடை மருத்துவ முகாம்:**

காலை 10.00 மணிக்கு, கால்நடை மருத்துவ முகாம் பொன்னுஞ்சல் திருமண மண்டபத்தின் முகப்பில் நடைப்பெற்றது. இதில் பொள்ளாச்சி வடக்கு, இராமநாதபுரம்,

கால்நடை மருத்துவமனையை சேர்ந்த கால்நடை மருத்துவர், திரு. சரவணகுமார் அவர்கள் கலந்துகொண்டு கால்நடைகளை பரிசோதித்து தகுந்த சிகிச்சைகளை இலவசமாக வழங்கினார். சுமார் 10க்கும் மேற்பட்ட ஆடுகள், 30க்கும் மேற்பட்ட மாடுகள் மற்றும் சில கன்றுகளை அழைத்து வந்து கிராம மக்கள் பயனடைந்தனர். மேலும் இதற்கு, மாணவர்கள் நேரடியாக வீட்டிற்கே சென்று கால்நடைகளை அழைத்து வந்தனர். முகாமின் போது தடுப்பூசி, காயம், கருப்பரிசோதனை மற்றும் மாட்டு அம்மை தடுப்பூசி, மினரல் மிக்சர் மற்றும் ஒட்டுண்ணி விரட்டி, வயிற்றுப்புழு மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டது. மக்கள் இந்த முகாமுக்கு எதிர்பாராத அளவில் நேரில் வந்து பங்கேற்றனர். முகாமின் இறுதியில், இடைநிலை நோய்கள், பரம்பரை நோய்கள், கால்நடைகளின் ஊட்டச்சத்து குறைபாடுகள் குறித்தும் சிறப்பு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

**3. காளான் வளர்ப்பு பற்றிய செயல் விளக்கம் மற்றும் தொழில்நுட்ப உரை:**

மதியம் 4.00 மணிக்கு காளான் வளர்ப்பு பற்றிய செயல் விளக்கம் மற்றும் தொழில்நுட்ப உரை நடைபெற்றது. இதற்கு முனைவர். D. துர்காதேவி (உதவி பேராசிரியர், பயிர் பாதுகாப்பு துறை) VIA, அவர்கள் கலந்துகொண்டு காளான் வளர்ப்பு பற்றி செயல் விளக்கத்துடன் எடுத்துரைத்தார். அப்போது அவர் காளான் வளர்ப்பில் மேற்கொள்ளப்படும் பல்வேறு நுணுக்கங்களை செயல் வடிவில் மிகவும் எளிமையாக விளக்கினார். இந்நிகழ்ச்சிக்கு ஜலத்தூர் மற்றும் சுற்று வட்டாரத்தில் இருந்து சுமார் 47 விவசாயிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

**ஐந்தாம் நாள் (24.07.2025) வியாழக்கிழமை**

**1. சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு பேரணி**

காலை 8.30 மணிக்கு மாணவர்கள், சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு பேரணியை நடத்தினர். இதில் மாணவர்கள் கையில் வாசக பலகையுடன் ஊர்வலம் வந்தனர். அப்போது, அவர்கள் சாலை பாதுகாப்பு குறித்த வாசகங்களை கூறி, வீடு வீடாக சென்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இன்றைய இளைஞர்களிடையே பெருமளவு பரவியிருக்கும் பாதுகாப்பற்ற நடைமுறைகளை எடுத்துரைக்கும் வகையில் இந்த விழிப்புணர்வு பேரணி அமைந்தது.

**2. இலவச பொது மருத்துவ முகாம்**

காலை 10 மணிக்கு இலவச பொது மருத்துவ முகாம் மற்றும் இரத்ததான முகாமும் நடைபெற்றது. இதற்கு ராம் பல் நோக்கு மருத்துவமனை மருத்துவ குழுவுடன் பொள்ளாச்சி தலைமை மருத்துவமனை இரத்த வங்கி, மற்றும் நெகமம் அரசு மருத்துவமனை மருத்துவ குழு இணைந்து இலவசமாக மக்களுக்கு சிகிச்சையளித்தனர். முகாமை பற்றி அறிந்ததும் கிராம மக்கள் சுமார் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இதில் 25க்கும் மேற்பட்ட மாணவர்கள் இரத்த தானம் செய்தனர். மாணவர்கள் நேரடியாக வீட்டிற்கே சென்று வயதானவர்களை அழைத்து வந்தனர். இம்முகாமில் கண் பரிசோதனை, சர்க்கரை நோய் பரிசோதனை, ரத்த அழுத்த பரிசோதனை மற்றும் பலர் தங்கள் உடல் ரீதியான சந்தேகங்களை இலவசமாக கேட்டுத் தெரிந்து கொண்டு சிகிச்சைப் பெற்று பயனடைந்தனர்.

**3. ஒருங்கிணைந்த பந்தல் முறையில் காய்கறிகள் சாகுபடி பற்றிய தொழில்நுட்ப உரை:**

மாலை 4.00 மணிக்கு ஒருங்கிணைந்த பந்தல் முறையில் காய்கறி சாகுபடி குறித்து தொழில்நுட்ப உரையை, வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் தோட்டக்கலைத் துறை உதவி பேராசிரியர்கள் முனைவர் N. நவீனா மற்றும் A. நித்தியானந்தம் அவர்கள் வழங்கினர். குறிப்பாக, வெள்ளரிக்காய் (Cucumber) சாகுபடிக்கு பந்தல் முறை மிகவும் ஏற்றது என்பதை அவர்கள் தெளிவுபடுத்தினர். வெள்ளரிக்காய் செடிகள் பரவலாக வளரும் தன்மை கொண்டவை. எனவே, பந்தல் முறையில் வளர்ப்பதன் மூலம் செடிகளின் பரப்பளவு குறைக்கப்படுவதுடன், ஒளி மற்றும் காற்றோட்டம் சிறப்பாக இருப்பதால் நோய் தாக்கம் குறைகிறது. மேலும், பழங்கள் மண்ணைத் தொடாமல் தொங்கவிடப்படும் போது அவை தூய்மையாகவும், நல்ல தரத்துடனும் கிடைப்பதுடன், சந்தையில் அதிக விலையும் பெறுகின்றன என்பதை அங்கு கலந்துக்கொண்ட விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

**ஆறாம் நாள் (25.07.2025) வெள்ளிக்கிழமை**

**1. பள்ளியின் சுற்றுச்சுவரில் ஓவியம் வரைதல்**

காலை 9.00 மணிக்கு பள்ளி சுற்றுச்சுவரில் ஓவியம் வரைதல் நிகழ்ச்சி உற்சாகமாக நடைபெற்றது. மாணவர்கள் அனைவரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது படைப்பாற்றலை வெளிப்படுத்தினர். பல்வேறு அழகான ஓவியங்கள் சுவரில் வரையப்பட்டன. ஒவ்வொரு ஓவியமும் தனித்துவமான கருத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. இயற்கை பாதுகாப்பு, சமூக ஒற்றுமை, சுற்றுச்சூழல் சுத்தம், கல்வியின் முக்கியத்துவம் போன்ற பல கருத்துகள் ஓவியங்களில் பிரதிபலித்தன. பள்ளி குழந்தைகள், ஆசிரியர்கள் மற்றும் ஊர் பொது மக்கள் கூட அந்த ஓவியங்களை ரசித்து மகிழ்ந்தனர். மாணவர்களின் திறமையும் கலைப்புலனும் அனைவராலும் பாராட்டப்பட்டது. அந்த ஓவியங்கள் பள்ளி சுற்றுச்சுவருக்கு ஒரு புதிய அழகையும் உயிரூட்டலையும் வழங்கின. இந்நிகழ்ச்சி மாணவர்களின் படைப்பாற்றலையும் சமூக விழிப்புணர்வையும் உயர்த்தியது.

**2. தென்னையில் மதிப்பு கூட்டல் மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றிய கருத்தரங்கம்**

காலை 11.00 மணிக்கு தென்னையில் மதிப்பு கூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் குறித்து கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் உணவியல் மற்றும் ஊட்டச்சத்து துறை உதவிப் பேராசிரியை முனைவர் M. ரம்யா அவர்கள் கலந்துக்கொண்டு செயல்விளக்க உரையாற்றினார். அப்போது, தென்னையின் பொருளாதார முக்கியத்துவம், அதிலிருந்து பெறப்படும் பொருட்கள், அவற்றின் பயன்பாடு குறித்து விளக்கினார். அவர் தனது உரையில், தேங்காயை பயன்படுத்தி தயாரிக்கக்கூடிய பல வகை மதிப்புகூட்டப்பட்ட பொருட்களான, தேங்காய் எண்ணெய், தேங்காய் பவுடர், தேங்காய் சட்னி, தேங்காய் பால், தேங்காய் சர்க்கரை மற்றும் நார்ச்சத்து பொருட்கள் பற்றியும் அவற்றின் சந்தை தேவைகள், சேமிப்பு முறைகள், மற்றும் விளம்பரத்துறை வாய்ப்புகள் பற்றியும் தெளிவாகக் கூறினார். மேலும் மதிப்பு கூட்டலின் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல்

வருமானம் கிடைக்கும் வாய்ப்பு இருப்பதை சந்தைப்படுத்தலின் அவசியம், அதற்கான முறைகள் பற்றியும் எடுத்துரைத்தார். இந்த செயல்விளக்க உரையானது விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

**3. சுற்றுச்சூழல் மேம்பாடு மரக்கன்றுகளை நடுதல்**

மாலை 03.00 மணிக்கு சுற்றுப்புற சூழலை மேம்படுத்தும் நோக்கில் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து ஆர்வத்துடன் பங்கேற்றனர். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக திரு. செந்தில் குமார், ஆலம் விழுது ஒருங்கிணைப்பாளர், ஆனைமலை அவர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கிவைத்தார். இதில் புங்கம், வேம்பு, மகிழம் போன்ற பல்வேறு மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்த முயற்சி பள்ளி வளாகத்தில் பசுமையை அதிகரித்ததுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தியது. இறுதியாக மாணவர்கள் மரங்களை பாதுகாக்க உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

**ஏழாம் நாள் (26.07.2025) சனிக்கிழமை**

**1. பள்ளி குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்**

காலை 9.00 மணிக்கு பள்ளி குழந்தைகளுக்காக பல்வேறு விளையாட்டு போட்டிகள் உற்சாகமாக நடத்தப்பட்டன. மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது திறமையை வெளிப்படுத்தினர். போட்டிகளின் முடிவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சி குழந்தைகளின் மகிழ்ச்சியையும் ஆர்வத்தையும் அதிகரித்து, விளையாட்டு மனப்பாங்கை வளர்த்தது.

**2. நிறைவு விழா**

ஏழு நாட்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்ற நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாமின் நிறைவு விழா காலை 11.00 மணிக்கு பொன்னூஞ்சல் திருமணமண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சி மாணவிகளின் தமிழ்தாய் வாழ்த்துடன் துவங்கியது. முதலில் நாட்டு நலப்பணி திட்ட மாணவர்களின் பிரதிநிதி செல்வி ஆஷிகா வரவேற்புரையை வழங்கினார். இதனை தொடர்ந்து தலைமை உரையை வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் முதல்வர் முனைவர், திரு. K. பிரபாகர் அவர்கள் நிகழ்த்தினார். இவ்விழாவிற்கு பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திரு. G.இரகுபதி முன்னிலை ஏற்று உரையாற்றினார். விழாவில் வாழ்த்துரையை திரு கோரைச்செல்வம் M.A, (ஜலத்துர்), அவர்கள் வழங்கினார். நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, முகாம் நிறைவு அறிக்கையை மாணவர்கள் சிறப்பாக சமர்ப்பித்தனர். அதன் பின்னர் நன்றியுரையை நாட்டுநலப்பணி திட்ட மாணவர்களின் பிரதிநிதி செல்வன் அருணாச்சலம் அவர்கள் வழங்கினார், அதனை தொடர்ந்து தேசிய கீதம் பாடப்பட்டு விழா நிறைவுபெற்றது.

நாட்டுநலப் பணிக்குழு
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி



# Agri Intex 2025 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான தளம்

கோயம்புத்தூரில் நடைபெற்ற கொடிசியா - Agri Intex 2025 சர்வதேச வேளாண் வர்த்தகக் கண்காட்சியில், நாபெஃட் நிதியுதவியுடன் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் (VIA) வழிகாட்டுதலில் மூன்று உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு (FPCs) விற்பனை அரங்கு ஏற்பாடு செய்திருந்தது. இது, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நேரடியாக தங்கள் தயாரிப்புகளைச் சந்தைக்கு கொண்டு செல்லும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

மேலும் இந்நிகழ்வில் அனிருத் பெஃட் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் (தோகைமலை), நல்லேறு பெஃட் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் (வடமதுரை), மற்றும் கோதனம் கிரீன்லைஃப் பெட் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் (கிருஷ்ணராயபுரம்) ஆகிய நிறுவனங்கள் தங்கள் உறுப்பினர் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட பாரம்பரிய அரிசி, சிறுதானியங்கள், பருப்பு வகைகள், வேர்க்கடலை மற்றும் பால் சார்ந்த மதிப்பு கூடிய தயாரிப்புகளை காட்சிப்படுத்தினர். பல்வேறு விற்பனையாளர்கள், வாங்குபவர்கள் ஆகியோருடன் நேரடி தொடர்பு ஏற்படுத்தி புதிய சந்தை வாய்ப்புகளை அறிந்துகொண்டனர்.

இந்தக் கண்காட்சியில் பங்கேற்றதன் மூலம், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சந்தையின் தேவைகள், விலை நிலை, பேக்கேஜிங் முன்னுரிமைகள் போன்றவற்றை அறிந்து கொண்டதுடன், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பிராண்டிங் முறைகளையும் கற்றுக்கொண்டனர். 5 நாட்களில் சுமார் ரூ.1,55,000 மதிப்பிலான விற்பனையை பதிவு செய்தது, இந்த கண்காட்சியின் வெற்றியை வெளிப்படுத்தியது.

பங்கேற்றவர்கள் தெரிவித்ததாவது, இத்தகைய பெரிய அளவிலான கண்காட்சியில் பங்கேற்றது தங்களின்

நம்பிக்கையை அதிகரித்ததுடன், தர மேலாண்மை மற்றும் வாங்குபவர் எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொள்ள பெரும் உதவியாக இருந்தது. வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் அளித்த ஆதரவு, ஸ்டால் ஏற்பாடு, பிரசாரப் பொருட்கள், வழிகாட்டுதல் மிகவும் பாராட்டப்பட்டது.

Agri Intex 2025 பங்கேற்பு, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை சந்தையுடன் இணைக்கும் ஒரு முக்கிய அத்தியாயமாக அமைந்தது. இதன் அடிப்படையில் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், எதிர்காலத்தில் நேரடி வாங்குபவர் சந்திப்புகள், தரம் மற்றும் பிராண்டிங் குறித்த பயிற்சிகள், மேலும் பல FPC களை இத்தகைய கண்காட்சிகளில் பங்கேற்க ஊக்குவிக்கும் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இத்தகைய முயற்சிகள், விவசாயிகளை வலுப்படுத்தி, உற்பத்தி மற்றும் சந்தை இடையிலான இடைவெளியை நிரப்பும் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் உறுதியை வெளிப்படுத்துகின்றன

# வேளாண் பொறியியல் மாணவ / மாணவிகளுக்கு ஒரு நாள் பயிற்சி

ஜூலை 28 அன்று ஹிந்துஸ்தான் பொறியியல் கல்லூரியில் உள்ள வேளாண் பொறியியல் துறை சார்ந்த 44 மாணவர்கள் மற்றும் 3 ஆசிரியர்கள் ஒரு நாள் பயிற்சியாக நம் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கும் வேளாண் தொழில் அபிவிருத்தி மையத்தில் மதிப்பு கூட்டப்பட்ட தேங்காய் சார்ந்த உணவுப் பொருட்கள் குறித்த செய்முறை பற்றிய விரிவான விளக்கமும் மற்றும் தேங்காய் சார்ந்த இயந்திரங்களான தேங்காய் டீஷெல்லர், தேங்காய் டெஸ்டா ரிமூவர், தேங்காய் வெட்டும் இயந்திரம், ஹோமோஜெனிசர், தேங்காய் சிப்ஸ் ஸலைசர், தேங்காய் பல்வரைசர், தேங்காய் பால் எடுக்கும் இயந்திரம், பாஸ்டரைசர் கம் வாக்கியூம் ஆவியாகும் இயந்திரம், கேபினட் டிரையர் முதலிய இயந்திரங்கள் பற்றியும் அதன் விரிவான விளக்கமும் செயல்பாட்டு முறையும் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தேங்காய் ஸ்குவாஷ், தேங்காய் சாக்லேட் உருண்டைகள் குறித்த செயல்பாட்டு வழிமுறை பயிற்சியும் அளிக்கப்பட்டது. மதிப்பு கூட்டப்பட்ட தேங்காயில் மகசூலான வருமானம் ஈட்டலாம் என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.





# பண்ணைப் பள்ளி பயிற்சி

பண்ணைப்பள்ளி பயிற்சியானது தொண்டாமுத்தூர் கிராமம், பொள்ளாச்சி தெற்கு வட்டம் இதில் எண்ணெய் விதைகளில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை (ICM in Oilseeds) என்ற தலைப்பில் முனைவர் மு. ர. நந்தகுமார், இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், உழவியல் துறை, வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், அவர்கள் விவசாயிகளுக்கு எண்ணெய் விதைகளில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை (ICM) குறித்த பயிற்சியை வழங்கினார்.

இந்த நிகழ்வில் திரு. தங்கசாமி (முன்னாள் உதவி வேளாண் இயக்குநர்), திரு. இருதயராஜ் (துணை வேளாண் அலுவலர் தெற்கு வட்டம்), திரு. பாபு (உதவி வேளாண் அலுவலர்) மற்றும் திருமதி நந்தினி (BTM) ஆகியோர் கலந்து கொண்டனர். சுமார் 20 விவசாயிகள் ஆர்வத்துடன் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

நிகழ்வின் தொடக்கத்தில், எண்ணெய் விதைகளில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மையின் முக்கியத்துவம், நன்மைகள் மற்றும் சவால்கள் குறித்த சுருக்கமான உரை வழங்கப்பட்டது. அதன் பின், துணை வேளாண் அலுவலர், உதவி வேளாண் அலுவலர் மற்றும் முன்னாள் உதவி இயக்குநர் (பொள்ளாச்சி தெற்கு வட்டம்) ஆகியோர் விவசாயிகளுக்கான பல்வேறு வேளாண் திட்டங்களை விரிவாக விளக்கினர்.

இப்பயிற்சி நிகழ்வு, எண்ணெய் விதை உற்பத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மையின் பயன்பாடு மற்றும் அதன் மூலம் பெறக்கூடிய திறன் மேம்பாடு, உற்பத்தி உயர்வு, மற்றும் செலவு குறைப்பு ஆகியவற்றைப் பற்றி விவசாயிகளுக்கு நடைமுறை பயிற்சி அளிக்கப்பட்டது.

✻ கல்லூரி நிகழ்வுகள் ✻



# விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி

கிணத்துக்கடவில் உள்ள கிருஷ்ணராயபுரம் கிராமத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், 07.08.2025 அன்று ஏற்பாடு செய்த விவசாயிகளின் கூட்டத்தில், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் தோட்டக்கலைத் துறை இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். சி.கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு தேங்காயில் சீரிய சாகுபடி தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் பேசினார். இந்த விவசாயக் கூட்டத்தில் சுமார் 110 விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சியை பெற்றதோடு தங்களுடைய சந்தேங்களையும் கேட்டுத் தெளிவு படுத்திக் கொண்டனர்.

# உளுந்து விதைப்பு மாணவர்களின் பயிர் உற்பத்தி

தற்போது, 2022 ஆம் ஆண்டு பட்டப்படிப்பு மாணவர்கள் (193 பேர்), தங்கள் மூன்றாம் ஆண்டு B.Sc. (Hons.) Agriculture பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக, AGR 303 – Practical Crop Production (Rabi Crop) – II (0+2) பாடத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பயிற்சியின் ஒரு பகுதியாக, மாணவர்கள் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், வடக்கு பண்ணை (VIA North Farm) பகுதியில் உளுந்து (Blackgram) – VBN 11 பயிரை சாகுபடி செய்துள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் 08, 2025 ஆம் தேதி உளுந்து விதைக்கப்பட்டது. தற்போது பயிர் கிளை வளர்ச்சி நிலையைக் (Branching stage) கடந்துள்ளது.

இந்த செயல்முறையில் மாணவர்கள் பின்வரும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்:

- நிலம் தயார் செய்தல் மற்றும் விதைப்பு செயல்முறை
- உரமிடல் மற்றும் பாசன மேலாண்மை
- களை கட்டுப்பாடு
- வளர்ச்சி நிலைகளை கவனித்தல்

இந்த பயிற்சி வாயிலாக, மாணவர்கள் பயிர் உற்பத்தி தொழில்நுட்பங்கள், துல்லியமான பண்ணை மேலாண்மை மற்றும் பயிர் வளர்ச்சியின் நிலைகளை அடையாளம் காணும் திறனை கற்றுக் கொண்டுள்ளனர். மேலும், குழு ஒருங்கிணைப்பு, பொறுப்புணர்வு மற்றும் பண்ணை பராமரிப்பு திறன்களும் மேம்பட்டுள்ளன.

# விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி




பொள்ளாச்சி வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் கீழ் இயங்கி வரும் வேளாண் தொழில் அபிவிருத்தி மையத்தில், தென்னை சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் சார்ந்த ஒரு நாள் பயிற்சி விவசாயிகளுக்கு 08.08.2025 அன்று அளிக்கப்பட்டது. திருச்சூர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தைச் சேர்ந்த 15 இயக்குனர்கள் மற்றும் விவசாயிகள் இந்த பயிற்சியில் பங்கேற்றனர். தென்னை சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் குறித்த செயல் விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து தேங்காய் சிப்ஸ் மற்றும் தேங்காய் சாக்லேட், உருண்டைகள் தயாரிப்பதற்கான முழு செயல்முறை பயிற்சியும் அளிக்கப்பட்டது. பின்னர் தேங்காய் டீஷெல்லர், தேங்காய் டெஸ்டா ரிமூவர், தேங்காய் பல்வரைஸர், தேங்காய் பால் எக்ஸ்ட்ராக்டர், தேங்காய் சிப்ஸ் ஸ்லைசர் மற்றும் பாஸ்ட்ரைசர் கம் வாக்யூம் ஆவியாகும் இயந்திரம் உள்ளிட்ட தேங்காய் உணவு பதப்படுத்தும் அனைத்து இயந்திரங்கள் பற்றியும் அதனைச் சார்ந்த உணவுப் பொருட்கள் பற்றியும் விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியினை முனைவர் ரம்யா மற்றும் சாந்தினி ஆகியோர் வழங்கினர்.

# பிரிவு உபசார விழா

நமது கல்லூரியில் கடந்த 23 08 2025 - ஆம் தேதி 2021 - 25 ஆண்டு மாணவாகளுக்கான பிரிவு உபசார விழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியின் தொடக்கமாக எங்கள் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் மற்றும் 2021- ஆம் ஆண்டு உதவி ஒருங்கிணைப்பாளரான முனைவர். P.நிவேதாதேவி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். அடுத்ததாக கல்லூரியின் இயக்குநர் முனைவர். N. கெம்புச்செட்டி அவர்கள் பாராட்டுரை வழங்கினார். அதைத் தொடர்ந்து எமது கல்லூரியின் முதல்வர் முனைவர். K. பிரபாகர் அவர்கள் தலைமையுரை வழங்கினார். பிறகு முனைவர். K.ரவிக்குமார் இணைப் பேராசிரியர் மற்றும் 2021 - ஆம் ஆண்டு ஒருங்கிணைப்பாளர் பிரியாவிடை உரை அளித்தார்.

இறுதி ஆண்டு பிரதிநிதிகளான செல்வி G.தாரணி மற்றும் திரு. K.கவின்ராஜ் அவர்கள் பிரியாவிடை ஏற்பு உரை வழங்கினர் மற்றும் தங்களின் மறக்க முடியாத நினைவுகளை அனைவருடனும் பகிர்ந்துக் கொண்டனர். இதையடுத்து 2021 - 25 ஆண்டு மாணவர்களைப் பற்றிய ஒரு காணொளி திரையிடப்பட்டது. அந்த காணொளியைக் கண்டு மாணவர்களின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. அனைத்து மாணவர்களுக்கும் விடைபெறும் பரிசு வழங்கப்பட்டது. விழாவின் முடிவாக முனைவர். கிருஷ்ணமூர்த்தி, இணைப் பேராசிரியர் மற்றும் 2022 ஆண்டு ஒருங்கிணைப்பாளர் அவர்கள் நன்றியுரை வழங்கினார். கல்லூரியில் சேகரித்த நினைவுகள் மாணவர்களின இதயங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும். தேசிய கீதம் பாட, விழா இனிதே நிறைவடைந்தது.

**✻ கல்லூரி நிகழ்வுகள் ✻**




# விளையாட்டு தினம் 2025

பொள்ளாச்சி வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் பதினெட்டாவது ஆண்டு விளையாட்டு தினம் 14 ஆகஸ்ட், 2025 அன்று நடைபெற்றது. இவ்விழாவிற்கு தலைமை விருந்தினராக மாணவர் நல மையத்தின் பேராசிரியர் மற்றும் முதல்வர் முனைவர். ஜே.ராமலிங்கம் கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (TNAU) , அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி இயக்குநர் முனைவர். N.கெம்புசெட்டி அவர்களின் அன்பான பாராட்டு உரையுடன் தொடங்கியது, அதைத் தொடர்ந்து முதல்வர் முனைவர். K. பிரபாகர் அவர்களின் எழுச்சியூட்டும் தலைமை உரை நடைபெற்றது.

நிகழ்ச்சி முறையாக கொடிகளை ஏற்றி வைத்ததுடன் தொடங்கியது: தலைமை விருந்தினர் முனைவர். ஜே. ராமலிங்கம் தேசியக் கொடியை ஏற்றினார், இயக்குனர் முனைவர். N.கெம்புசெட்டி ஒலிம்பிக் கொடியை ஏற்றினார், முதல்வர் முனைவர் K. பிரபாகர் அவர்கள் கல்லூரிக் கொடியை ஏற்றினார். விரைவில், நான்கு ஹவுஸ் அணிகளும் NCC பிரிவும் இணைந்து நடத்திய கண்கவர் அணிவகுப்பு, ஒழுக்கம், ஒருங்கிணைப்பு மற்றும் பெருமையை வெளிப்படுத்தியது.

வரவேற்பு உரையை துணை உடற்கல்வி இயக்குநர் திருமதி எஸ். சரண்யா நிகழ்த்தினார், அதைத் தொடர்ந்து துணை உடற்கல்வி இயக்குநர் லெப்டினன்ட் எஸ். விஜய் குமார் இவ்வாண்டு விளையாட்டு அறிக்கையை வழங்கினார். அவர் நிறுவனத்தின் கடந்த ஆண்டின் சாதனைகள் மற்றும் மைல்கற்களை எடுத்துரைத்தார். தலைமை விருந்தினர் முனைவர் ஜே. ராமலிங்கம் தனது உரையில், ஒழுக்கம், குழுப்பணி மற்றும் விடாமுயற்சியை வளர்ப்பதில் விளையாட்டு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை வலியுறுத்தினார்.

பின்னர் மாணவர்கள் சத்தியப்பிரமாணம் செய்து, நியாயமான விளையாட்டு, நேர்மை மற்றும் எதிர் அணிகளுக்கு மரியாதை அளிப்பதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டனர் இது உண்மையான விளையாட்டுத் திறனின் சாரத்தை பிரதிபலிக்கிறது. ஸ்கார்லெட் அணி பெருமையுடன் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப்பை வென்றதால், போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் இரண்டாம் இடத்தைப் பிடித்தவர்களுக்கும் கோப்பைகள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு துடிப்பு சேர்க்கும் வகையில், மாணவர்கள் ஒரு துடிப்பான ஏரோபிக் நடனத்தையும், பிரமிட் அமைப்பையும் நிகழ்த்தினர், இது கொண்டாட்டத்தை மறக்கமுடியாததாகவும் வண்ணமயமாகவும் மாற்றியது.

# சுதந்திர தின விழா - 2025

ஆகஸ்ட் 15, 2025 அன்று நமது வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியில் சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் நாட்டின் வளர்ச்சிக்கும் சுதந்திர காற்றுக்கும் ரத்தம் சிந்திய தலைவர்களுக்கும் மூவர்ண கொடி கொண்டு இடையில் அசோகச் சக்கரத்தை தாங்கியபடி நின்றுக்கொண்டிருக்கும் தாய் நாட்டின் தேசியக்கொடிக்கும் வர்ண ஜாலங்கள் முழங்க கல்லூரி வளாகத்தில் மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் வரவேற்புரையாளரான கல்லூரியின் இணை பாதுகாப்பு படை அதிகாரி லெப்டினன்ட். எஸ் விஜயகுமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். அதில் அவர் கூறியதாவது "உடலை தரையாக்கி உதிரத்தை நிறை ஆக்கி வீரத்தை மொழியாக்கி உயிரை சுவடாக்கி கட்டி எழுப்பப்பட்ட சுதந்திரத்தின் கோபுரம் எங்கள் உயிரினும் மேலானது தாய் திருநாடு" என்று தாளப் பறந்த மூவர்ணக்கொடியை கௌரவித்து முன்மொழிந்தார். அவர் உரையை தொடர்ந்து நம் கல்லூரியின் தேசிய பாதுகாப்பு படை செயலாளர் கேடட். கவிபாரதி சுதந்திர தின வாழ்த்துக்களையும் தாய்நாடு தலைநிமிர்ந்த வரலாறு பற்றியும் உரையாற்றினார்.

" வீழ்ந்தாலும் விதையாய் முளைப்போம் எங்கள் தாய் நாட்டை காக்க" என்று கேட்பவர் நெஞ்சில் வீர உணர்வு கலப்பது போல் அமைந்திருந்தது. 300 வருடமாய் முற்றுகையிட்ட ஆங்கிலேயர்களின் அரக்க ஆட்சி முடிந்தது என்று முழங்கி நின்றது எந்த நாளோ, அந்நாளான இன்று நம் தாய் திருநாட்டின் வண்ணக் கொடி நம் எண்ணங்களில் உதிக்கும் மூவர்ணக் கொடி வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியின் முதன்மை வளாகத்தில் கல்லூரியின் முதல்வரால் ஏற்றப்பட்டது.

" பட்டொளி வீசி பறந்துக் கொண்டிருந்த அந்த ஒரு நொடி, தாய்நாட்டின் புகழ் எண்ணங்களை தாண்டி எல்லைகள் பல கடந்து பறந்தது. கல்லூரியின் சுவாசக் காற்றில் பறந்து கொண்டிருந்த கொடியின் நிழலில் கல்லூரியின் தேசிய பாதுகாப்பு படை (6 TN MED COY) மாணவர்களால் மரியாதை செலுத்தப்பட்டது.

இமயத்தில் இருப்பதால் எங்கள் இமைகள் கூட இமைப்பதில்லை இதயத்தில் எங்கள் தாய் திருநாடு இந்தியா இருப்பதால் எங்கள் சுவாசத்தில் கூட சுயநலம் இல்லை என்பதை பறைசாற்றும் பரேட் அணிவகுப்பு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஜி தாமோதரன் அவர்களால் சுதந்திர தின உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே" என்ற

செந்தமிழ் உரையில் தொடங்கி முடிவுரை வழங்கினார் கல்லூரியின் முதல்வர் முனைவர். K. பிரபாகரன் அவர்கள் பிறகு சான்றிதழ்களை வழங்கினார் கல்லூரியின் இயக்குனர் முனைவர். N. கெம்புசெட்டி. அதனை தொடர்ந்து தேசிய பாதுகாப்பு படை மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது அதில் அவர்கள் கல்லறை பூக்கள் என்ற தலைப்பில் "புதைக்கப்பட்டவர்கள் அல்ல நாங்கள் விதைக்கப்பட்டவர்கள் உறங்கிக் கொண்டிருந்தாலும் சுவாசத்தில் சுதந்திர காற்று கலந்திருக்கிறது" இவ்வாறு இருந்தது என்பதை விளக்கினார். இறுதியாக கேடட். ஜான்சி ராணியின் முடிவுரையில் விழா நிறைவுற்றது

# ஆண்டுவிழா - 2025

எமது வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியில் கடந்த ஆகஸ்ட் மாதம் 22 ஆம் நாள் கல்லூரியின் 18ஆவது ஆண்டுவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு திரு K. நித்தியானந்தம் பூர்ணா விவசாயி, உற்பத்தியாளர், நிறுவனத்தின் தொழிலதிபர் மற்றும் தலைவர் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்தார். விழாவானது தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியபின் சிறப்பு விருந்தினர், இயக்குனர், முதல்வர் மற்றும் ஆசிரியர்களால் குத்து விளக்கு ஏற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக முனைவர் S.K.சங்கரி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பின் இயக்குனர் முனைவர் கெம்புசெட்டி மற்றும் முதல்வர் முனைவர் பிரபாகர் அவர்கள் சிறப்பு விருந்தினரை கௌரவிக்கும் வகையில் பொன்னாடை அணிவித்தனர். அதனை தொடர்ந்து சிறப்பு விருந்தினர் அவர்கள் தனது உரையை தொடங்கினார். பின் கல்லூரியின் வருடப் புத்தகமான "சகா" வெளியிடப்பட்டது. அதனை தொடர்ந்து மாணவர்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் VIAOSA மாணவர்களுக்கு சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. பின் விழாவின் முக்கிய நிகழ்வாக மாணவர்களுக்கு அகில கல்வி சிறப்பு விருதுகள்; (2021, 2022, 2023), துறையின் முதல் மாணவர் விருது (2021), தேசிய சேவைத் திட்டம், தேசிய மாணவர் படைகளின் தன்னார்வளர் விருதுகள், RAWE விருதுகள், GEM OF VIA, 100%வருகைப் பதிவேட்டைப் பெற்றதற்கான விருதுகள் என்று பல்வேறு விருதுகளை அளித்து மாணவர்களை சிறப்பித்தனர். பின் மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவின் இறுதிக்கட்டமாக திரு. G. ருத்ரகுமார் அவர்கள் நன்றியுரை வழங்கினார். தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

# கோதனம் கிரீன் லைஃப் பெட் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் முன்னோடி முயற்சி



கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்திலுள்ள மேல்முனையனூர் கிராமத்தில் 320 உறுப்பினர்களுடன் இயங்கும் கோதனம் கிரீன் லைஃப் பெட் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் 31 ஜனவரி 2024 முதல் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் தனது முதன்மை தொழிலாக பால் கொள்முதல் மற்றும் சில்லறை விற்பனையை மேற்கொள்வதோடு, பால் மதிப்பு கூட்டும் பொருட்களான பன்னீர், பால்கோவா, நெய் மற்றும் வெண்ணெய் போன்றவற்றை தயாரித்து, கரூர் காந்திகிராமத்தில் இயங்கும் தனிக்கடையின் மூலம் நுகர்வோரிடம் விற்பனை செய்து வருகிறது.

தற்போது, நிறுவனத்தை அடுத்த கட்ட வளர்ச்சியடையச் செய்யும் நோக்கில் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் (NDDB) மற்றும் குமரகுரு கல்வி நிறுவனங்கள் இணைந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியின் கீழ் ஊரக உழவர் அங்காடி திட்டத்தை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தத் தொடங்கியுள்ளன. இந்த திட்டத்தின் முதற்கட்டமாக மூன்று உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றாக, மேல்முனையனூரில் கோதனம் கிரீன் லைஃப் பெட் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் முன்னெடுத்து செயல்படுத்த தொடங்கியுள்ளன.

இந்நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஊரக உழவர் அங்காடி திறப்பு விழாவும், ABT நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் பால் கொள்முதல் நிலையம் திறப்பு விழாவும் இடம்பெற்றன. மேலும், இவ்விழாவுடன் இணைந்து நிறுவனத்தின் வருடாந்திர பொதுக்குழுக் கூட்டமும் சிறப்பாக நடைபெற்றது.

வருடாந்திர பொதுக் குழு கூட்டத்திற்கு குமரகுரு கல்வி நிறுவன ஆராய்ச்சி திட்ட தலைவர் முனைவர் தன்னம்மாள் ரவிச்சந்திரன், ஏ.பி.டி. அதிகாரி திரு. வடிவேல், நாபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு. பிரபாகரன், கரூர் எல்.டி.எம். திரு. வசந்த்குமார், கரூர் மாவட்ட சந்தைப்படுத்தல் துணை இயக்குநர் திருமதி. புனிதா மற்றும் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. முருகானந்தம் ஆகியோர் இந்நிகழ்ச்சியின் விருந்தினர்கள் ஆவர்.

இந்நிகழ்ச்சியில் 170க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

முன்னோடி விவசாயின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகள், கிராமப்புறங்களில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வலிமையையும், பால் மற்றும் பால் சார்ந்த தொழில்களின் வளர்ச்சிக்கு புதிய வாய்ப்புகளையும் வெளிப்படுத்துகின்றன.

# APW401 மூலம் ஆராய்ச்சி திறன்களை வளர்த்தல் குறிக்கோள்கள் மற்றும் முக்கியத்துவம்

APW401 - திட்ட அறிக்கை தயாரிப்பு மற்றும் மதிப்பீடு (0+1) பாடத்தின் நோக்கம் விவசாயத்தில் ஆராய்ச்சி சார்ந்த படிப்புகளை அடையாளம் கண்டு மேற்கொள்வதற்கும், தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வில் அறிவியல் முறைகளைப் பயன்படுத்துவதற்கும். அறிக்கை எழுதுதல், வழங்கல் மற்றும் மதிப்பீட்டில் திறன்களை வளர்ப்பதற்கும் மாணவர்களுக்கு உதவுவதாகும். வேளாண் சார்ந்த நடைமுறை சவால்களை கள அறிவு நடைமுறை பயன்பாடுகளுடன் எதிர் கொண்டு புதுமைகளை ஊக்குவிக்கவும் இந்த பாடநெறி முக்கியமாக விளங்குகிறது

இலக்கிய மதிப்பாய்வு, தரவு சேகரிப்பு, புள்ளிவிவர பகுப்பாய்வு மற்றும் அறிவியல் அறிக்கை எழுதுதல் ஆகியவற்றில் மேம்பட்ட திறன்களை வளர்த்து கொள்ள உதவுகிறது

முறையான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் மதிப்பீடு மூலம் தகவல்தொடர்பு மற்றும் விளக்கக்காட்சி திறன்களை வளர்த்து வேளாண் வணிகம் மற்றும் வேளாண் தொழில்முனைவோர் தொழில்களை ஆதரிக்கும் ஆராய்ச்சி திறனை மேம்படுத்த உதவுகிறது.

விவசாயத் துறையில் விவசாயிகள், விரிவாக்க பணியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு பயனளிக்கும் வகையில் அறிவு உருவாக்கத்திற்கு பங்களிப்பு வழங்குகிறது.

**நான்காம் ஆண்டு**

மாணவர்கள் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் விவசாயத்துடன் தொடர்புடைய நடைமுறை மற்றும் களம் சார்ந்த தலைப்புகளில் கவனம் செலுத்தியும், ஒன்பது துறைகளில் 36 ஆராய்ச்சி திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொண்டனர். இந்த ஆராய்ச்சி தலைப்புகள் கல்லூரி பேராசிரியர்களால் வழிநடத்தப்பட்டு கோட்பாட்டு அறிவை நோக்கமாகக் கொண்டு ஆய்வுகளின் முடிவுகள் அனைத்தும் முதல்வர் மற்றும் பேராசியர் முன்னிலையில் விளக்கப்பட்டன.

முதல்வரின் வழிகாட்டுதல்களின்படி, திட்ட வெளியீடுகள் முன்னணி அரசியல் சார்ந்த ஆராய்ச்சி இதழ்களில் வெளியிட்டு கல்வி மற்றும் விவசாய ஆராய்ச்சி சமூகத்திற்கு பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# இளநிலை வேளாண் அறிவியல் பட்டப்படிப்பில் அனுபவ கற்றல் திட்டம் (ELP)

அனுபவ கற்றல் திட்டம் (ELP) என்பது இளநிலை வேளாண் அறிவியல் பாட திட்டத்தில் மாணவர்களின் தொழில்முனைவோர் திறனை வலுப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் மாணவர்களை தொழில் நுட்ப திறன் மற்றும் சந்தைப்படுத்தும் திறனை வளர்த்து தொழில்முனைவோராக மாற்றும் கள பயிற்சியாகும். ELP “செய்வதன் மூலம் கற்றல்” முடிவெடுக்கும் திறன்கள், வணிக திட்டமிடல் திறன் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் பெற மாணவர்களுக்கு உதவுகிறது.

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் இளநிலை வேளாண் அறிவியல் நான்காம் ஆண்டு மாணவர்களுக்கு எட்டாவது பருவத்தில் 16 செயல் முறை கற்றல் பாடத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**பாடத் திட்ட விவரங்கள்**

1. மண் ஆரோக்கியம், நீரின் தரம் மற்றும் தாவர ஊட்டச்சத்துக்கான பண்ணை ஆலோசனை
2. வணிக ரீதியான தேனீ வளர்ப்பு
3. வணிக ரீதியான பட்டு புழு உற்பத்தி
4. வேளாண் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மேலாண்மை
5. தோட்டக்கலை பயிர்களின் வணிக நாற்று பண்ணை தொழில்நுட்பம்
6. வணிக ரீதியான கறிக்கோழி வளர்ப்பு மற்றும் முட்டை கோழி உற்பத்தி
7. வேளாண் வணிகத்திற்கான நிர்வாகத் திறன்கள்
8. ஒருங்கிணைந்த வேளாண்மை பண்ணை முறை
9. இயற்கை உரம் தயாரிக்கும் தொழில்நுட்பம்
10. வணிக ரீதியான உயிரியல் முறை கட்டுப்பாடு திரவங்களை உருவாக்குதல்
11. வணிக ரீதியான காளான் உற்பத்தி
12. வணிக ரீதியான விதை உற்பத்தி
13. காய்கறி பயிர்களின் பாதுகாக்கப்பட்ட சாகுபடி
14. வணிகத் தாவர திசு வளர்ப்பு
15. இணைய வழி சந்தைப்படுத்தல்
16. ட்ரோன் பயன்பாட்டு தொழில்நுட்பம்

அனுபவக் கற்றல் திட்டத்தின் (ELP) ஒரு பகுதியாக, மாணவர்கள் ஜூலை 10 முதல் 14, 2025 வரை நடைபெற்ற கொடிசியா (CODDISIA) வேளாண் கண்காட்சியில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். மாணவர்கள் தங்கள் தயாரிப்புகள், தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்முனைவோர் திறன்களை விவசாயிகள், வேளாண் வணிக வணிகர்கள் மற்றும் பொது மக்களுக்கு வெளிப்படுத்தும் தளமாக அமைந்தது. மாணவர்கள் பங்கேற்பின் மூலம், மாணவர்கள்

சந்தைப்படுத்தல், வாடிக்கையாளர் தொடர்பு, நிறுவன மேலாண்மை மற்றும் வேளாண் வணிக ஊக்குவிப்பு ஆகியவற்றில் அனுபவத்தைப் பெற்றனர்.

வேளாண் கண்காட்சியின் போது 2.9 லட்சம் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டது குறிப்பிடத்தக்க சாதனையாகும், இது மாணவர்களின் சந்தை திறன், நுகர்வோர் ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் தொழில்முனைவோர் திறனை பிரதிபலிக்கிறது. இது அனுபவக் கற்றல் தன்னிறைவை எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாமல், வேளாண் தொழில்முனைவோரை சாத்தியமான தொழில் பாதையாகத் தொடர மாணவர்களை ஊக்குவித்தது.



## ஊரக வேளாண் பணி அனுபவ கற்றல் மற்றும் திட்டக்கண்காட்சி

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

கற்க வேண்டியதை குற்றமறக்கற்று அதன்படி வாழ வேண்டும் என்பது வள்ளுவனின் வாக்கு. அதற்கேற்றார் போல் உருவாக்கப்பட்டது தான் கிராம தங்கல் திட்டம் ஊரக தொழில் முனைவோர் விழிப்புணர்வு மேம்பாட்டு திட்டம். இத்திட்டமானது கிராமப்புற தொழில் முனைவோருக்கு, விவசாயத்தில் உள்ள நடைமுறை அணுகுமுறைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் மூலம் அனைத்து வேளாண் கல்லூரிகளிலும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பட்டதாரிகள் சுயதொழில் மேற்கொள்வதற்கும், கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், உணவு பாதுகாப்பிற்கும், விவசாயத்தை மேம்படுத்துவதற்கு தேவையான திறன்களை அளிக்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சொல்லு நான் மறப்பேன். எனக்கு காட்டு, என் நினைவில் இருக்கலாம். என்னை ஈடுபடுத்துங்கள், நான் புரிந்து கொள்வேன் என்ற கோட்பாட்டின்படி வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியில், நான்காம் ஆண்டு வேளாண்மை பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு, ஊரக தொழில் முனைவோர் விழிப்புணர்வு மேம்பாட்டு பாடத்திட்டம் பயிற்றுவிக்கப்படுகிறது. பல திறன்களை பெற்ற வேளாண் பட்டதாரிகளை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும். இந்தத் திட்டம் மாணவர்களுக்கு ஒரு சிறந்த தளத்தை உருவாக்குவதாக அமைந்தது.

“செய்வதன் மூலம் கற்றல் (Learning by doing) மற்றும் பார்ப்பதன் மூலம் நம்பிக்கை (Seeing is believing)” என்ற தத்துவங்களின் அடிப்படையில் இப்பாடத்திட்டத்தை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வழிகாட்டுதலின்படி அமைக்கப்பட்டது.

ஊரக வேளாண் பணி அனுபவம் மாணவர்களுக்கும், கிராமப்புற சூழ்நிலைகளை புரிந்து கொள்வதற்கும், விவசாயிகள் பின்பற்றும் விவசாய தொழில் நுட்பங்கள் பற்றி அறியவும், ஊரக வளர்ச்சிக்காக, மாணவர்கள் வேளாண் குடும்பங்களுடன் இணைந்து பணியாற்றும் திறன் மற்றும் மனப்பான்மைகளை வளர்க்க உதவுகிறது. மேலும் வேளாண் மாணவர்களுக்கு விவசாயம் சார்ந்த பிரச்சினைகளை கண்டறியவும், வேளாண் விரிவாக்க கருவிகளை பயன்படுத்தி நவீன விவசாய தொழில்நுட்பங்களை விவசாய பெருமக்களிடம் கொண்டு சேர்க்கவும், வழிவகை செய்கிறது.

மாணவர்கள் விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சி தொடர்பான பல்வேறு திட்டங்களை பற்றி அறியவும் மற்றும் அவற்றை செயல்படுத்துவதில் உள்ள வாய்ப்பையும் உருவாக்குகிறது. விவசாயிகளின் பல்வேறு பிரச்சனைகளை பற்றி மாணவர்கள் அறிந்து கொள்வதுடன் விவசாயம் சார்ந்த அறிவியல் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதில் திறமையையும் நம்பிக்கையையும் பெற உதவுகிறது. இது விஞ்ஞானிகளின் மேற்பார்வையில் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் செயல்படுத்தப்படுகிறது.

**ஊரக வேளாண் பணி அனுபவத்தின் முக்கிய நோக்கங்கள்:**

1. மாணவர்களுக்கு கிராமப்புற சூழ்நிலையில் வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களை அறிய செய்தல்.
2. மாணவர்களுக்கு விவசாயிகளின் சமுதாய மற்றும் பொருளாதார நிலைமைகளையும் விவசாயம் சார்ந்த பிரச்சினைகளையும் நன்கு அறிய செய்தல்.
3. மாணவர்களுக்கு செயல்முறை பயிற்சியின் மூலமாக நடைமுறையில் நிலவும் பிரச்சனைகளை அறிய செய்தல் மற்றும் அதற்கான தீர்வு காண செய்தல்.
4. மாணவர்களின் தகவல் தொழில்நுட்பத் திறன்களை வளர்க்கவும் வேளாண்

கருவிகளை பயன்படுத்தி தொழில்நுட்பத்தை விவசாயிகளிடம் கொண்டு செல்லும் திறன்களை வளர்க்கவும் உதவுதல்.

5. சிக்கலான பிரச்சனைகளை சரி செய்யும் அளவிற்கு மாணவர்களின் திறமையையும் நம்பிக்கையையும் வளர்த்தல்.

6. நடைமுறையில் உள்ள விரிவாக்கம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டு திட்டங்களை பற்றி விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்துதல்.

மொத்தம் 75 நாட்கள் கொண்ட பாடத்திட்டத்தில் 60 நாட்கள் கிராம தங்கல் திட்டமும், ஐந்து நாட்கள் வேளாண் உதவி இயக்குனருடன் இணைந்து பல்வேறு திட்டங்களையும், வேளாண் துறையின் செயல்பாடுகள் முதலியவற்றையும் அறிந்து கொள்கின்றனர். மீதமுள்ள ஐந்து நாட்கள் அரசு சாரா தொண்டு நிறுவனத்துடன் இணைந்து அவற்றின் செயல்பாடுகளையும், கடைசி ஐந்து நாட்கள் வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு சென்று மேலாண்மை திறன்களை வளர்த்து கொள்ள உதவுகிறது. வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் இறுதியாண்டு மாணவர்கள் 16 குழுக்களாகப் பிரிந்து, RAWE (Rural Agricultural Work Experience) பயிற்சி நிகழ்ச்சிக்காக ஆனைமலை, பொள்ளாச்சி (தெற்கு), கம்பம், சத்தியமங்கலம், கபிலர்மலை, மோகனூர், காவேரிப்பட்டணம், கரூர், பென்னகரம், பாலக்கோடு, சேந்தமங்கலம், கொளத்தூர், தோகைமலை, வாழப்பாடி, வத்தலகுண்டு, உத்தமபாளையம் இடங்களில் தங்கி பயிற்சி பெற்றனர். இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து மாணவர்கள் கல்லூரி திரும்பியதும் தாங்கள் கற்றவற்றைக் கண்காட்சியின் மூலம் காட்சிப்படுத்தினர்.

பரண்மேல் ஆடு வளர்ப்பு, காற்றாலை மாதிரிகள், சுருள்பாசி உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல், வெற்றிலை சாகுபடி முறைகள், காளான் உற்பத்தி, நாட்டு சர்க்கரை உற்பத்தி, ட்ரோன் தொழில்நுட்பம் மற்றும் மீன் வளர்ப்பு ஆகியவை கண்காட்சியின் சிறப்பு அம்சங்கள் ஆகும். மாணவர்கள் தாங்கள் சேகரித்த நாட்டு ரகங்களின் விதைகளைப் பார்வைக்கும் வைத்தனர். மாணவர்கள் தாங்கள் இணைக்கப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் செயல்பாடுகளை விளக்கினர். மேலும் அவர்கள் பார்வையிட்ட தொழில் துறையின் செயல்பாடுகளையும் விவரித்தனர்.

மஞ்சள் புரட்சி தொடர்பான “Technology Mission on Oilseeds” தமிழ்நாட்டில் எப்போது அறிமுகம் செய்யப்பட்டது?

விடை: 1986

# தமிழ்நாடு கால்நடை ஆராய்ச்சி மற்றும் மருத்துவக் கல்லூரியில் விவசாயிகளுக்கு இரண்டு நாட்கள் பயிற்சி




வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் கடந்த எட்டு ஆண்டுகளாக விரிவாக்கத்துறையில் விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நபார்டு NABARD நிதி உதவியுடன் இயங்கும் பெரும்பதி கால்நடை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் கிணத்துக்கடவு பெரும்பதி கிராமத்தில் அமைந்துள்ளது. இந்நிறுவனத்தில் சுமார் 800 க்கும் மேற்பட்ட கால்நடை விவசாயிகள் பங்குதாரர்களாக உள்ளனர். இதில் பெரும்பாலானோர் சிறு மற்றும் குரு விவசாயிகளாக உள்ளனர். சிறு மற்றும் குரு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்நிறுவனம் வழிவகை செய்யும். அதில் ஒரு பகுதியாக கால்நடை உள்ளவர்களுக்கு இரண்டு நாட்கள் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. சுமார் 20க்கும் மேற்பட்ட விவசாயிகளை தமிழ்நாடு கால்நடை ஆராய்ச்சி மற்றும் மருத்துவக் கல்லூரி ஒரத்தநாடுக்கு அழைத்துச் சென்று இரண்டு நாட்கள் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. இப்பயிற்சியில் கால்நடை வளர்ப்பு முறைகள், தீவன மேலாண்மை, நோய் மேலாண்மை, ஆரோக்கியமான முறையில் எவ்வாறு கன்றுகளை ஈற்றெடுப்பது குறித்தும், பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. மேலும் அங்கு அமைந்துள்ள கால்நடை கொட்டகை ஆடு வளர்ப்பு, எருமை மாடு வளர்ப்பு, கறிக்கோழி உற்பத்தி, முட்டை கோழி உற்பத்தி, பன்றி பண்ணை ஆகியவற்றை நேரடியாக களப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. இப்பயிற்சியில் கால்நடை வளர்க்கும் சிறுகுறு விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதே ஆகும். இந்த இரண்டு நாட்கள் பயிற்சி இதற்கு உறுதுணையாக அமைந்தது. மேலும் இந்த இரண்டு நாட்கள் பயிற்சியினை வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் திட்ட மேலாளர் முனைவர் கா. காளிதாஸ் மற்றும் ஒருங்கிணைப்பாளர் திரு சிற்பி பால சுப்ரமணியம் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

# வாழையில் ஊடுபயிர் சாகுபடி செய்தல் மற்றும் வறட்சியிலிருந்து பாதுகாக்கும் முறை

வாழை கன்று நடவு செய்யும்போதே ஊடுபயிர் செய்யலாம்.

கன்றுகளுக்கு இடையே உள்ள காலி இடத்தில் தட்டைப் பயிறு விதைக்கலாம். செடி முருங்கையை ஒரு வரிசை விட்டு, ஒரு வரிசை நடவு செய்யலாம். இந்த இரண்டு பயிர்களும் வாழை மரத்தை பாதிக்காது. கிடைக்கும் சூரியஒளியை வைத்தே வளர்ந்துவிடும். தட்டைப் பயிறும், செடிமுருங்கையும் காற்றில் உள்ள தழைச்சத்தை இழுத்து மண்ணை வளப்படுத்தும். தட்டைப் பயிறு உயிர்மூடாக்கவும் செயல்படும். இதன் இலைகள் கால்நடைகளுக்கு சிறந்த உணவு. இந்த இரண்டு பயிர்களையும் வயலில் வாழை உள்ள வரை பயிரிட்டு வரலாம்.

வாழை நடவு செய்த ஐந்து மாதங்களுக்குப் பிறகு வயல்களில் சூரிய ஒளி விழுவது தடைபடும். இக்காலத்தில் குறுகியகாலப் பயிர்களைச் சாகுபடி செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்தால் வாழை சாகுபடி செலவை ஈடு கட்ட முடியும், என்றனர்.

பத்து மாதப் பயிரான வாழையில் ஊடு பயிராக விவசாயிகள் கொத்தவரங்காய் பயிர்களை சாகுபடி செய்கின்றனர்.

கொத்தவரங்காயை 90 நாள் பயிர். அதனை ஊடுபயிராக அதிகளவு விவசாயிகள் சாகுபடி செய்வது வரவேற்கத்தக்கது.

விதை நடவு செய்த 30வது நாளிலிருந்து காய்ப்பு பருவத்துக்கு வர 70 முதல் 90 நாள் வரை ஆகும். இந்த நேரத்தில், ஒரு ஏக்கரில் வாரத்துக்கு 80 முதல் 100 கிலோ வீதம் காய் உற்பத்தியாகும். உபரியாக கொத்தவரங்காய் மூலம் நல்ல வருவாய் கிடைக்கும்.

இதை தவிர விவசாயிகள் சிறிய வெங்காயம், கத்தரி போன்ற பயிர்களையும் ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். இருப்பினும், விவசாய தொழிலாளர்களின் கூலி உயர்வால், களை எடுப்பது முதல் அறுவடை வரை அதிக பணம் செலவாவதால், விவசாயிகள் போதிய லாபம் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சூழ்நிலையில் கொத்தவரங்காய் ஊடுபயிராக பயிரிட்டால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஓரளவுக்குச் சமாளிக்கலாம்.

வாழைமரத்தின் குருத்துப்பகுதி வெயிலின் தாக்கத்தால் சுருண்டு இலை விரியாமல் இருக்கும். இதற்கு மெத்தலோ பாக்டிரியாவை வாங்கி 10 லிட்டர் தண்ணீருக்கு 100 மில்லி என்ற அளவில் கலந்து குருத்துப்பகுதி நன்கு நனையும்படி காலை அல்லது மாலை வேளையில் தெளிக்கலாம்

S. சிற்பி பால சுப்ரமணியம்
ஒருங்கிணைப்பாளர்
வேளாண் அபிவிருத்தி மையம்வாணவராயர்
வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி

VANAVARAYAR
Institute of Agriculture
Enriching India

Ministry of Agriculture
& Farmers Welfare.
Government of India

National Institute of Agricultural
Extension Management

# வேளாண் மற்றும் பொது அறிவியல் பட்டதாரிகளுக்கான 45 நாட்கள் இலவசப் பயிற்சி

## Agri Clinics & Agri Business Centre Scheme
**(மத்திய வேளாண் அமைச்சகத்தின் திட்டம்)**



**கல்வித் தகுதி**
வேளாண் மற்றும் பொது அறிவியல் சார்ந்த படிப்புகள்



**வயது**
18 முதல் 60 வரை





**வங்கிக்கடன்**
5 லட்சம் முதல் 1 கோடி வரை




### மானியம்
பொது பிரிவிற்கு : 36%
பெண்கள் மற்றும் இதர வகுப்பினர் : 44%

### வசதிகள்
இலவச தங்குமிடம், உணவு, பயிற்சி ஏடுகள், தொழில், நிர்வாகம் மற்றும் திட்டமிடும் பயிற்சிகள். ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப பயிற்சி மையங்களைப் பார்வையிடுதல். வங்கிக்கான திட்ட அறிக்கைகள் தயாரித்து கொடுத்தல்.

AGRI-BUSINESS INCUBATOR
ABI

**அக்ரி கிளினிக் & அக்ரி பிசினஸ் சென்டர்**
**வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்**
மணக்கடவு, பொள்ளாச்சி(தாலுக்கா), கோவை (மாவட்டம்) - 642103
+91 74026 18009, +91 99429 08466 edp@via.ac.in www.via.ac.in



VANAVARAYAR
Institute of Agriculture

VIA




www.via.ac.in

Mail : info@via.ac.in | Phone : +91 74026 18001